Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டி எண் 49

மலா 3 | யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 19 ஆம் நாள் துல்ஹஜ் 16 (1-6 61) | வியாழக்கிழமை | இதழ் 91

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

அரசாங்கத்தின்

# கைத்தொழில்கொள்கை

## என்ன? தனியார்கள் சங்கடம்

### இந்திய வர்த்தகர் சங்கத்தில் திரு. வைத்தியநாதன் பேச்சு

கொழும்பு, புதன்

அரசாங்கத்தின் வர்த்தக, கைத்தொழில் கொள்கையைத் திட்டவட்டமாக வெளியிடுமாறு இந்திய வர்த்தக சபையின் தலைவராய் இருந்து விலகும் திரு. கே. எஸ். வைத்தியநாதன் கேட்டுக்கொண்டார். இந்திய வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் அவர் பேசினார்.

"அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கை தெளிவாய் இல்லாததால், தனியார் துறைக்குக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. தனியார்துறை பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய உதவியாய் இருக்கவேண்டுமென்று அரசாங்கம் கூறிவந்ததைத் தொடர்ந்து ஓரளவு நம்பிக்கை வளர்ந்து வந்தது. ஆயினும் தனியார் துறைக்கு இல்லாத உரிமைகளும், சலுகைகளும் கொடுத்து அரசாங்க கார்ப்பரேஷன்களை நிறுவும் சமீபத்திய சட்டம், இந்த நம்பிக்கையைப் பாழ்படுத்திவிட்டது. தனியார் துறையால் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்களுக்கே கார்ப்பரேஷன்களும் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில், உரிமைகள், சலுகைகளை அளிக்காது தனியார்துறையுடன் அவைகளை போட்டியிட விடுவதே சரியானது. அரசாங்கம் தனியார்துறையின் இக் கஷ்டங்களை ஆராயும் என நம்புகிறேன் என்றும் திரு. வைத்தியநாதன் கூறினர்.

திரு. வி. எஸ். அருளானந்தம் தலைவராகவும், திரு. டி. என். தியாகராஜா காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

## வாக்காளர் ஜாபிதா

### அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் அறிவுறுத்தல்

கொழும்பு, புதன்

தங்கள் ஆதரவாளர்கள், அனுதாபிகள் ஆகியோரின் பெயர்கள் வாக்காளர் ஜாபிதாவில் இடம் பெற்றிருக்கிறதா என அவர்களைக் கேட்டுக்கொள்ளுமாறு, சகல அரசியல் கட்சிகளுக்கும் பாராளுமன்ற தேர்தல் கமிஷனர் அறிவுறுத்தியிருக்கிறுர். இவ்வாரம் குறித்த ஜாபிதாக்கள் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

## "பத்திரிகைச் செய்தி தவறு"

கொழும்பு, புதன்

இங்கிலாந்திலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. குணசேன டி' சொய்ஸாவின் யோசனை பேரில் இரண்டு இலங்கை மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட லண்டன் உபகாரச் சம்பளங்களை அரசாங்கம் நிறுத்தியதாய் கடந்த 4ம் தேதி கொழும்பிலுள்ள ஒரு பத்திரிகை பிரசுரித்திருந்த செய்தி தவறுனது என பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஒரு அறிவிப்பு கூறுகிறது. ஹைகமிஷனர் இவ்விதம் யோசனை கூறவில்லை என்றும், உபகாரச் சம்பளம் நிறுத்தப்படவும் இல்லை என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## வானெலி அதிபர் லண்டன் பயணம்

கொழும்பு, புதன்

இலங்கை வானெலி ஒலி பரப்பு அதிபர் திரு. டி' மெல் நேற்று லண்டன் புறப்பட்டுச் சென்றுர். 4 வாரங்கள் அவர் லண்டனில் தங்கி பி. பி. ஸி. அதிகாரிகளுடன் சம்பாஷணை நடத்துவார். பல ஒலிபரப்பு டெலிவிஷன் நிலையங்களையும் பார்வையிடுவார்.

## களனி ராஜமகா விகாரை

கொழும்பு, புதன்

களனி ராஜமகாவிகாரையின் நிர்வாகத்தை பொது தர்மகர்த்தா பரிபாலனத்தின்கீழ் விடும் யோசனைபற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது. இப்போது வத்தளை சீவரத்ன தேரோ, இக்கோயிலை நிர்வகித்து வருகிருர்.

## 3-ம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அரசாங்கம் 8000கோடி செலவிடும்

### தேசிய அபிவிருத்தி சபையில் நேருஜீ துவக்க உரை

புதுடில்லி, மே 31

தேசிய அபிவிருத்திச் சபையின் இரண்டு நாள் கூட்டத்தை இன்று இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு ஆரம்பித்துவைத்தார். 3-ம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்குமுகமாக இக் கூட்டம் நடைபெறுகிறது.

"3-ம் ஐந்தாண்டுத் திட்டம் அநேகமாக இறுதி வடிவம் பெற்றுவிட்டது. இத் திட்டத்திற்கு 7500 கோடி ரூபாய் என்றிருந்ததை, நிலைமையைப் பொறுத்து 8000 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக்கலாம் எனத் திட்டமிடப்பட்டது. ஆண்டுதோறும் திட்டம் பரிசீலனை செய்யப்படும். நாட்டின் ஒரு பகுதியினருக்குமட்டுமின்றி, தேசம் முழுவதற்குமான தேசியத் திட்டமே இது" என்றும் நேருஜீ குறிப்பிட்டார். அரசாங்கத்துறையும், தனியார் துறையும் சேர்ந்து இத்திட்டத்திற்கு 10,500 கோடி ரூபாய் செலவாகும்.

யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டம்

## ஒழுங்கைகளின் பெயர்களை மாற்ற பிரேரணை

### "நூல்நிலையத்துக்கு பொருட்கள் வாங்கிய பணம் கொடுபடவில்லை"

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாண நூல் நிலையத்துக்கு 1959-ல் புத்தகம் வைப்பதற்கான இரும்பு அலுமாரிகள் வரவழைத்த வகையில் கொழும்பிலுள்ள ஒரு கம்பெனிக்கு ரூ. 15,000 கொடுபட வேண்டியுள்ளது என நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- முறைப்படி இது பெறப்படாதபடியால் பணம் கொடுக்கப்படவில்லை. இதுசம்பந்தப்பட்ட விஷயங்களைப் பரிசீலனைசெய்ய முடியாமலிருக்கிறது. முன் இருந்த மேயர் சம்பந்தப்பட்ட 2 பைல்களை எடுத்துச் சென்றதே இதற்குக் காரணம். அவர் அந்த பைல்களைத் திருப்பித் தரவில்லை. தருமாறு எக்ஸ்பிரஸ் கடிதம் எழுதுவோம். அந்த பைல்களில் மேற்படி கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் இருப்பதாகத் தெரிகிறது. அதில் சபையின் சார்பில் யாரும் கையொப்பமிடவில்லை.

முன்னள் மேயர் திரு. துரையப்பா எம். பி. க்கு இது விஷயமாக கடிதம் ஒன்று எழுதுவதென்று சபை தீர்மானித்தது.

குவாசி எம். எம். சுல்தான், வண. பிதா. ஜே. எம், எவ். லோங்கின் மரணம் குறித்து இரண்டு நிமிட அனுதாபத் தீர்மானமொன்றைப் பிரேரித்துப் பேசியதாவது:- வண பிதா, லோங் ஒரு சமூகசேவையாளர். அவர் நாட்டின் நலன் குறித்துப்பாடுபட்டார். யாழ்ப்பாண நூல் நிலையம் உருவாக்குவதற்கு அவர் அரும் தொண்டு புரிந்தார்.

வண. பிதா. லோங்கின் பிரிவு குறித்து சபையோர் எழுந்து இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டித்தனர்.

நகர மத்தியில் குறுங்கோண வடிவமாயுள்ள பருத்தித்துறை வீதி—பலாலி வீதிச் சந்தியைச் சீர்திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ்ப்பாணம் பொது மராமத்துப் பகுதி மேற்பார்வை இஞ்சினியரைக் கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்று

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழியில் கிராம சேவகர் பரீட்சை

### மாவட்ட ரீதியான விபரங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

இப்பொழுதுள்ள கிராமத் தலைமைக்காரர் முறையை நீக்கி அதற்குப் பதிலாக கிராம சேவகர்களை நியமிக்கும் புதிய திட்டத்துக் கிணங்க கிராம சேவகர்களைத் தெரிவு செய்வதற்கென ஜுலை மாதம் 22-ந் திகதி பரீட்சை நடைபெறவிருக்கிறது.

பரீட்சைப் பகுதியால் நடத்தப்படும் இப்பரீட்சை அவ்வப் பகுதி கச்சேரியிலுள்ள பட்ட நடைபெறும்.

3,178 கிராம சேவகர்களைத் தெரிவுசெய்வதற்கு நடைபெறும் இப் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மட்டும் 152 கிராம சேவகர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

**கண்டி மாவட்டம்**

| | |
|---|---|
| உடுநுவர—ஜட்டிநுவர | 3 |
| கறித்பத்துவ | 5 |
| அத்ததும்புற | 4 |
| உடபலாத்த | 1 |

**அம்பாறை மாவட்டம்**

| | |
|---|---|
| பாணமைப்பற்று | 3 |
| அக்கறைப்பற்று | 15 |
| கரவாகு—நிந்தவூர் | 26 |
| சம்மாந்துறைப்பற்று | 10 |

**மட்டக்களப்பு மாவட்டம்**

| | |
|---|---|
| மண்முனை தெற்கு, எருவில், ஓரதீவு பற்று | 28 |
| மண்முனை வடக்குப் பற்று | 25 |
| ஏறுவூர் பற்று | 13 |
| கோரளைப் பற்று | 15 |

**மொணருகலை மாவட்டம்**

| | |
|---|---|
| எல்லச்ச | 1 |

**மாத்தறை மாவட்டம்**

| | |
|---|---|
| கங்கலட பற்று | 1 |
| வெலிகம கோறளை | 2 |
| எல ஓட பற்று | 2 |

**பதுளை மாவட்டம்**

| | |
|---|---|
| உடுகிந்தை | 1 |

**அநுராதபுரம் மாவட்டம்**

| | |
|---|---|
| நுவரகமபலாத்தை | 1 |

**பொலன்னறுவை மாவட்டம்**

| | |
|---|---|
| புதுமெட ஈக்கொடபற்று தம்பங்கடுவ பலாத்தை | 10 |

**மன்னர் மாவட்டம்**

| | |
|---|---|
| மன்னர் | 10 |
| மாந்தை | 9 |
| முசலி | 14 |

**கேகாலை மாவட்டம்**

| | |
|---|---|
| கல்பொட, கினிகொடை, கோறளைகள் | 2 |
| பரணகுரு கோறளை | 1 |
| டெனிகம்பல கோறளை பதுவுலத்கமை | 1 |

**வவனியா மாவட்டம்**

| | |
|---|---|
| 'மெரிரைம்' பற்றுகள் | 9 |
| வவனியா வடக்கு | 10 |
| வவனியா தெற்கு | 12 |

**நுவரேலியா மாவட்டம்**

| | |
|---|---|
| கொத்மலை | 1 |

**களுத்துறை மாவட்டம்**

| | |
|---|---|
| களுத்துறை தோட்டமுனை | 5 |

(5-ம் பக்கம் பார்க்க)

## மலைநாட்டில் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

நேற்று நடைபெற்ற டெர்பி ரேஸில் இலங்கையில் மலைநாட்டைச் சேர்ந்த மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசு கிடைத்தது.

**கே. ஈ. எட்வின் பீட்டர்,** பஹால, இம்புல் கொடை. (பிஸிடியம்)

1-ம் பரிசு ரூ. 1,07,917-48

**பி. சோமையா, (பி. டபிள்யூ. டி.)** டிக்கோயா. (டிக்ட்டிரேக்)

2-ம் பரிசு ரூ. 39,242-72

**வி. எல். எம். ரஷீத்,** தாலித் ஸ்டோர்ஸ், மாவனல்லை. (பர்டாவ்)

3-ம் பரிசு ரூ. 14,716-02

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.


## யாழ். வண்ணை — நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில்

### உயர்தர வகுப்புகள்

3-6-61 தொடக்கம் ஷ வித்தியாசாலையில் யாழ்/ஆரிய திராவிட பஷாபிவிருத்திச் சங்கத்தாரால் நடாத்தப்படும் பண்டித, பாலபண்டித, பிரவேச பரீட்ஷை வகுப்புக்கள் ஆரம்பமாகும் இவ்வகுப்புக்களில் சேர விரும்புவோர் தலைமையாசிரியருக்கு விண்ணப்பித்துச் சேர்ந்து கொள்ளலாம்.

விண்ணபத்தில், முழுப்பெயர்—பிறந்த திகதி—விலாசம்—சித்தியடைந்த இறுதிப் பரீட்ஷை—சேரக் கருதும் வகுப்பு—பெற்ருர் அல்லது பாதுகாவலர் என்ற விபரங்களுடன் எழுதுக. விண்ணப்பிப்போருக்கு விதிமுறை விதிகள் அனுப்பப்படும்.

வித்துவான் இ. திருநாவுக்கரசு
தலைமையாசிரியர்.

நாவலர் பாடசாலை,
யாழ்ப்பாணம். 29-5-61


### றேடியோ

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணனந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### ஆயுள்வேத அரிய மருந்துகள்

புற்றுநோயை (Cancer) வேரறுக்குமென செயல்மூலம் நிரூபிக்கப்பட்டமருந்து "யோகீஸ்வர ரசம்". தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு — வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து "பெரும்பாடு நிவாரணி". தாமதமின்றி கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா "புற்றுநோய் நிபுணர்", ஆயுள் வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### ஸபாஸ் ஸ்ருடியோ நெக்கெற்றிவ்ஸ்

எமது ஸ்ருடியோ நெக்கெற்றிவ்ஸ் இலக்கம் 1 முதல் 15000 வரை இனிமேல் வைத்துப் பாதுகாக்கப்படமாட்டாது. அதற்கு உரியவர்கள் விரும்பினல் 10-6-61க்குமுன் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸபாஸ் 11, ஸ்ரான்லிரேட், யாழ்ப்பாணம்.


### ரயில் நேரம்

யாழ்ப்பாணம் — கோட்டை
காலை 7-30 — மாலை 7-00
*பி. ப. 2-20 — இரவு 10-05
மாலை 5-43 — காலை 5-15

கோட்டை — யாழ்ப்பாணம்
*காலை 6-00 — பி. ப. 1-30
காலை 6-45 — மாலை 5-55
இரவு 8-35 — காலை 6-55
* 'யாழ்தேவி'

## சிறுவர்களுக்கான விளையாட்டிடம்

### ரோட்டரிச் சபையின் உதவி

மட்டக்களப்பு, புதன்
மட்டக்களப்பு நகரின் மிக நீண்ட நாட் தேவையான சிறுவர்களுக்கான ஒரு விளையாட்டிடத்தை அமைப்பதற்கு உள்ளூர் ரோட்டரிச் சபை மட்டக்களப்பு நகரசபை முற்றவெளியில் "ஜிம்கான கிளப்"பின் அருகில் நிலம் வழங்கியுள்ளது. சிறுவர்கள் விளையாடக் கூடிய பலவித விளையாட்டுக்கருவிகளையும் வழங்க ரோட்டரிக் கிளப் திட்டமிட்டுள்ளது.

## "தவருக உபயோகிக்க வேண்டாம்"

யாழ்ப்பாணம், வியாழன்
உள்ளூராட்சி உதவி அதிபரின் முத்திரை பொறிக்கப்பட்ட 'பிராங்கிலிப்ஸ்'களை கிராமச்சங்கங்கள் பிழையான வழியில் செந்தப் பாவிப்புக்குப் பயன்படுத்தக் கூடாதென்றும் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப் கிராமச் சங்கங்களுக்கு அனுப்பியிருக்கும் ஓர் சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கிராமச்சங்கங்கள் 'பிராங்கிலிப்ஸ்' மூலம் அனுப்பும் உள்ளூர் தாபல்கள் அனைத்தும் பதிவுப் புத்தகமொன்றில் முழு விபரத்துடன் பதியப்பட்டிருக்க வேண்டும் எனவும் துஷ்பிரயோகம் செய்யப்படாதெனவும் மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் பரீட்சை

உடுப்பிட்டி, செவ்வாய்
அநுராதபுரத்தில் நடைபெறுவதற்காக இருந்த ஆசிரியர் ஆலோசகர் பரீட்சை யாழ்ப்பாண ஆசிரியரின் வேண்டுகோளின்படி ஜூன் 2-ம், 3-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் அரசினர் சிரேஷ்ட பாடசாலை மண்டபத்தில் நடைபெறுமெனப் பரீட்சை அதிகாரி அறிவித்துள்ளார்.

## டிராக்டர் தட்டுப்பாடு

காரைதீவு, புதன்
கல்முனைக்குத் தென்மேற்கே தொடங்கி காரைதீவுவரையும் அமைந்துள்ள பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலமுடைய கரைவாகு வட்டையில் தற்பொழுது நெல்விதைப்பு ஆரம்பமாகியிருக்கிறபடியால் டிராக்டர் இயந்திரத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## மத்திய பிரதேசத்தில் நில அடமான வங்கி

புதுடில்லி, மே 31
மத்திய பிரதேசத்தில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்காக நில அடமான வங்கியொன்று நிறுவப்படவிருக்கிறது. பதினெட்டுக் கிளைகளை இந்த வங்கி கொண்டிருக்கும்.

மத்திய பிரதேசத்தில் 500 கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# புகையிலை ஒப்பந்தம் - டில்லிக்குத் தூது

## சங்கத்தின் முயற்சி

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலைக் கோட்டாவைப் புதுப்பிப்பது சம்பந்தமாக துரித நடவடிக்கை யெடுப்பதற்காக யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்தைச் சேர்ந்த தூதுகோஷ்டியொன்று டில்லிக்கும் கேரளத்துக்கும் இவ்வாரத்தில் பிரயாணமாகவிருப்பதாகத் தெரிகிறது.

இப்புகையிலைக் கோட்டாவைப் புதுப்பிப்பது சம்பந்தமாக கேரளஅரசாங்கம் தனது இணக்கத்தைத் தெரிவித்து இந்தியமத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பியிருந்தபோதிலும் அவர்களிடமிருந்து இன்னும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை. இதற்கு ஓர் உடனடித் தீர்வைக் காணவேண்டுமெனவும், ஓர் தூதுகோஷ்டியை டில்லிக்குஅனுப்பி விரைவில் இதற்கு ஓர் தீர்வு காணவேண்டுமெனவும் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இச்சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

இத்தூதுகோஷ்டி பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக இவ்வாரத்தில் இந்தியாவுக்குப் பிரயாணமாகுமெனத் தெரிகிறது.

## நாவலர் பாடசாலை

### பண்டித வகுப்பு நடத்த அனுமதி

யாழ்ப்பாணம், வியாழன்
வண்ணை நாவலர் வித்தியாசாலையில் தமிழ் உயர்தரவகுப்புக்களாகிய பண்டித வகுப்புக்களை நடாத்துவதற்கு வித்தியாதிகாரி அனுமதித்துள்ளார் எனத் தெரிகிறது.

இப்படியான வகுபுகளை நடத்துவதற்கு அனுமதி அளிக்குமாறு இப்பாடசாலை ஆசிரியர்கள் பலமுறை கல்வி இலாகாவுக்கு விண்ணப்பித்திருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை ஸ்தாபகராகிய நாவலர் பெருமானின் இலட்சியங்களான தமிழ் உயர்தரக் கல்வியையும் சமயக்கல்வியையும் வளர்ப்பதற்கு ஆதாரமான விடயங்களில் பாடசாலை ஆசிரியர்சங்கம் முயற்சியெடுத்து வருகின்றதாகத் தெரிகிறது.

## திருக்கேதீச்சரத்தில் சம்பந்தர் குருபூசை

கோப்பாய், வியாழன்
புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியினுல ஆண்டுதோறும் திருக்கேதீச்சரத்தில் நடாத்தப்படும் திருஞானசம்பந்தர் குருபூசை இவ்வாண்டும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இக் குருபூசை அன்னதானம் ஆகியவற்றில் கலந்துகொள்ளவும் கவனிப்பதற்காகவும் இக்கல்லூரியிலிருந்து அதிகமாணவர்களும் ஆசிரியர்களும் திருக்கேதீச்சரம் சென்று திரும்பியிருக்கின்றனர். இக்கோஷ்டி ஆசிரியர் திரு. வி. சண்முகம் தலைமையில் சென்று திரும்பியது.

சென்றஆண்டுகளில் இவ்வைபவத்திற் கலந்து கொள்வதற்காக இக்கல்லூரியிலிருந்து பிரயாணமாகும் சைக்கிள் கோஷ்டி இம்முறை செல்லவில்லை.

## தாக்குதல் சேதம்

பெஷாவார், மே 31
ஆப்கானிஸ்தான் எல்லையில் சமீபத்தில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதில் 92 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று பெஷாவார் மாவட்ட கமிஷனர் தெரிவித்தார்.

## ஆசிரியர்கள் இடமாற்றம்

முள்ளியவளை, புதன்
முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய திரு. வை. எம். லாம்ப் காலி மல்கற சுல்கியா சிரேட்ட பாடசாலைக்கும், கண்டி கெல்லி அரசினர் தமிழ்ப் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. மு. பொன்னையா கரையா முள்ளிவாய்க்கால் அரசினர் பாடசாலைக்கும், ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலை ஆசிரியை திருமதி மு. செல்லம்மா தண்ணீரூற்றுச் சைவப் பாடசாலைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

## பேசாலையில் ஓர் பஸ் நிலையம்

### இ. போ. ச. விடம் விண்ணப்பம்

மன்னர், புதன்
பேசாலைக் கிராமச்சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் பேசாலைக் கிராமத்தில் பஸ் நிலையமில்லாத குறையை நிவிர்த்திக்க முயற்சி எடுப்பதெனவும் மன்னர் மாவட்ட இ. போ. ச. மேலதிகாரிக்கு விண்ணப்பித்து குறையை நிவிர்த்திக்க நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவு செய்யப் பட்டது.

கிராமச் சங்கத்தலைவர் திரு. கே. எஸ். லம்பேட் கூட்டத்துக்கு தலைமை தாங்கினர்.

# 'அரசியல் வாதிகள் திருந்த வேண்டும்'

## குற்றங்கள் குறைவதற்கு பௌத்த பிக்கு யோசனை

களுத்துறை, செவ்வாய்
"மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதற்கு முன்னர் அரசியல்வாதிகள் முதலில் தங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும் ஏனெனில் நாட்டில் ஒழுங்கீனமும் அமைதியின்மையும் ஏற்படுவதற்கு அரசியல்வாதிகள்தான் காரணம்" என்று பண்டித பன்னவாச தேரோ களுத்துறை வடக்கில் நடைபெற்ற குற்றத் தடுப்பு வாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பன்னவாச தேரோ மேலும் பேசுகையில் அதிகாரத்திலுள்ளவர்கள் தங்களுஉன் கருத்து வேறுபாடு கொண்டுள்ளவர்களின் சுதந்திரத்தைஅடக்கவோ தடுக்கவோ எத்தனிக்கக் கூடாதென்று எச்சரித்தார்.

மற்றவர்கள் மீது அனுதாபமும் நல்லெண்ணமும் காட்டினல் குற்றங்களைக் குறைக்க முடியுமென்று தேரோ கூறினர்.

இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த அகமகா பண்டித பேருவல ஸ்ரீநிவாசமகாநாயக்க தேரோ பேசுகையில் சென்ற சிலவருடங்களாக அதிகாரிகளுக்கு எதிராக புரட்சிசெய்ய அரசியல்வாதிகள் மக்களுக்குப் போதித்தார்களென்றும்இதன் மூலம் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தினர்களென்றும் கூறினர்.

இப்பொழுதும்கூட அரசியல்வாதிகள் மக்களுக்கு முன்மாதிரி காட்டக்கூடிய விதத்தில் நடந்து தங்கள் தவறுகளைத் திருத்திக்கொள்ளலாம் என்று ஸ்ரீநிவாச தேரோ கூறினர்.

செல்வந்தர்களின் பதவி. அந்தஸ்து மோகமும் குற்றங்கள் அதிகரிப்பதற்கு மற்ருெரு காரணமென்று ஸ்ரீநிவாச தேரோ கூறினர்.

## பிரதமருக்கு நினைவுச் சின்னம்

### தியேட்டர் நிறுவப்படும்

கொழும்பு, புதன்
காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஞாபகார்த்தமாக கொழும்பில் ஒரு தியேட்டர் நிறுவப்படவிருக்கிறது.

சோவியத் உதவியுடன் அமைக்கப்படவிருக்கும் இத் தியேட்டருக்கான திட்டத்தைத் தயாரிக்க இரண்டு சோவியத் நிபுணர்களைக் கேட்டுக்கொள்ள விருப்பதாக உள்நாட்டு, கலாசார,கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா தெரிவித்தார்.

1,500 பேர் உட்கார்ந்திருக்கக் கூடிய இடவசதியுள்ளதாக அமைக்கப் படவிருக்கும் இத் தியேட்டரை எந்த இடத்தில் கட்டுவது என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

## கண்ணகை அம்மன் குளிர்த்தி விழா

காத்தான்குடி, புதன்
பழமை வாய்ந்த மஞ்சந்தொடுவாய் ஸ்ரீ கண்ணகை அம்மன் வருடாந்த விழா திருக்குளிர்த்தி ஆடலுடன் முடிவடைந்தது.

குழுத்திப் பாடலை மிக்க உணர்ச்சியுடன் பாடும்போது மெய்மறந்து மக்கள் தேவி வழிபாடு செய்வர்.




# வியன்ஞ பேச்சுவார்த்தைக்குப்பின் கெனடி-மாக்மிலன் சந்திப்பு

## பிரஞ்சு ஜனதிபதியை இன்று சந்திக்கிருர்

நியுயோர்க், மே 31

**சோவியத் பிரதமர் குருஷேவை சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கும் அமெரிக்க ஜனதிபதி கென்னடி முதலில் பிரஞ்சு ஜனதிபதி டிகாலேயும் பின்னர் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனேயும் சந்தித்துப் பேசுவார்.**

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சோவியத் பிரதமர் குருஷேவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமெரிக்க ஜனதிபதி கென்னடி வியன்னுவுக்குப் புறப்பட்டார்.

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னுவில் இரு தலைவர்களும் சந்தித்துப்பேசவிருக்கின்றனர்.

வியன்னுவிலுள்ள அமெரிக்க



மாக்மிலன்

ஸ்தானிகர் காரியாலயத்தில் முதல்நாள் சந்திப்பும் ரஷ்ய ஸ்தானிகர் காரியாலயத்தில் இரண்டாம்நாள் சந்திப்பும் நடைபெறும். சனிக்கிழமை இரவு இரு தலைவர்களுக்கும் ஆஸ்திரிய ஜனதிபதி இரவு விருந்துபசாரமளித்துக் கௌரவிப்பார்.

சோவியத் பிரதமரை வியன்னுவில் சந்தித்துப் பேசுவதற்கு முன்னர் திரு. கென்னடி பாரிஸுக்குச் செல்கிருர். பாரிஸில் பிரஞ்சு ஜனதிபதி ஜெனரல் டிகாலுடன் திரு கென்னடி பேச்சுவார்த்தை நடத்துவார். வியன்னுவுக்குச் செல்லுமுன் செக்கோஸ்லவாக்கியாவுக்கும் திரு. கென்னடி செல்வாரென்றும் செக்கோஸ்லவாக்கிய தலைவர்களுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வியன்னுவில் சோவியத் பிரதமர் குருஷேவுடன் பேச்சுவார்த்தை நடத்திமுடிந்தபின் திரு. கென்னடி லண்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனேச். சந்தித்துப்பேசுவார்.

அமெரிக்கஜனதிபதி பாரிஸுக்குப் புறப்படுமுன்னர் அளித்த ஒரு விசேஷ பேட்டியில் தங்கள் சந்திப்பு வெற்றியளிக்குமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

"ஆபத்தானகட்டத்தைக்கடந்துகொண்டிருக்கிருேம். எங்கள் பேச்சுவார்த்தைகளினல் அணு ஆயுத பரிசோதனைத் தடை, படைகுறைப்பு, லாவோஸ் பிரச்சினைபோன்றவைகளில் ஒரு சுமுகமான முடிவு ஏற்படுமானல் உலகம் வருங்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்கலாம்" என்று திரு. கென்னடி தெரிவித்தார்.



கெனடி

## தென்னிந்திய விஞ்ஞானிக்கு சர்வதேச பரிசு

ஜெனிவா, மே 30

ஆமதாபாத் இந்தியபௌதீக ஆராய்ச்சிசாலையின் பேராசிரியர் கே. ஆர். ராமநாதனுக்கு 1961–ம் வருஷத்திற்குரிய சர்வதேச வானசாஸ்திர ஸ்தாபனத்தின் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது. 68 வயதான திரு. ராமநாதன், இந்திய சர்வகலாசாலைகளில் பல பதவிகளை வகித்தபின், 1948-ல் ஆமதாபாத் பௌதீக ஆராய்ச்சி சாலையின் டைரக்டராக நியமிக்கப்பட்டார்.

## லிஸ்பனுக்கு அருகில் கோரவிமான விபத்து

### 61 பிரயாணிகள் மாண்டனர்

லிஸ்பன், மே 31

ரோமிலிருந்து கராக்காவுக்குச் சென்றுகொண்டிருந்த விமானம் ஒன்று நொறுங்கி விழுந்தது.

61 பிரயாணிகளுடன் சென்ற இந்த விமானத்தின் உடைந்த பாகங்கள் லிஸ்பனுக்கு ஆறுமைல் தூரத்தில் காணப்பட்டன.

விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் ஒருவராவது உயிர் தப்பவில்லை.

விமானத்தின் உடைந்த துண்டுகளுடன் பிரேதங்களும் கண்டெடுக்கப்பட்டன.

## பாகிஸ்தான் அவாமிக் கட்சி 12 பேர் கைது

கராச்சி, மே 31

பாகிஸ்தானில் தேசிய அவாமிக் கட்சியைச்சேர்ந்த பன்னிரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் புரட்சி ஏற்பட்டு ஆட்சிப் பொறுப்பை அயூப்கான் கையேற்றதும் பாகிஸ்தான் அரசியல் சாசனம் ரத்துச செய்யப்பட்டு அரசியல் கட்சிகளும் தடைசெய்யப்பட்டன.

இப்பொழுது தேசிய அவாமிக் கட்சியினர் அரசியல் இயக்கத்தில் ஈடுபட முயற்சி செய்ததாகக் கூறிக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## விஷம் கலந்த உணவு

### கொல்லத்தில் 8 பேர் பலி

கொல்லம், மே 31

கொல்லத்துக்கு அருகே மரத்தடி என்ற இடத்தில் விஷம் கலந்த உணவு அருந்தியதால் ஒரு ஆண், இரு பெண்கள், எட்டுக் குழந்தைகள் மாண்டனர். இந்த உணவை அருந்திய மற்றும் 83 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். திருவனந்தபுரத்திலிருந்து வந்த டாக்டர்கள் இவர்களுக்குச் சிகிச்சையளித்து வருகின்றனர்.

## "முன்னேற்றத்துக்கு பிரிவினைப் பிரச்சினை இடையூறு"

### தேசிய அபிவிருத்திச் சபை கூட்டத்தில் நேருஜி பேச்சு

புதுடில்லி மே, 31

"பிரிவினைப்பிரச்சினை நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் இடையூறு செய்கிறது" என்று பாரதப் பிரதமர் நேரு இன்று காலை புதுடில்லியில் தேசிய அபிவிருத்திச் சபையின் கூட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தியாவின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை இறுதிவடிவில் தயாரிப்பதற்காக தேசிய அபிவிருத்திசபை இன்று புதுடில்லியில் கூடியது. அஸ்ஸாம், ஒரிஸா ஆகிய இரண்டு ராஜ்யங்களின் முதன் மந்திரிகளைத் தவிர இதர ராஜ்யங்களின் முதன்மந்திரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் சென்ற ஜூலை மாதம் வெளியிடப்பட்டது. இதன்பின் தேசிய அபிவிருத்திச்சபை ராஜ்ய அரசாங்கங்களுடனும்மத்தியநிதியமைச்சுடனும் கலந்தாலோசனை செய்துவந்தது.

சபையின் கூட்டத்தைப் பிரதமர் நேரு இன்று காலை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதிவடிவிலுள்ளதென்றும் இதில் சில சிறு திருத்தங்கள் செய்யப்படலாமென்றும் குறிப்பிட்டார்.

"மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றி மக்கள் அளிக்கும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பொறுத்திருக்கிறது" என்று பிரதமர்நேரு கூறினர்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு பற்பல இடையூறுகள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன. என்ருலும் நாட்டுமக்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை வசதியளிக்கும் எங்கள் இலட்சியத்தை நாங்கள் நிறைவேற்றுவதில்தயங்கக்கூடாது" என்று திரு. நேரு கூறினர்.

கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர் நேரு கல்வித்துறைச் செலவைக் குறைக்கவோ வேலையைத் தாமதப்படுத்தவோ கூடாது என்ருர்.

## அங்கோலா நிலைமை டாக்டர் நிக்ருமா எச்சரிக்கை

ஆக்ரா, மே 31

"அங்கோலாவில் போர்த்துக்கலின் அட்டூழியத்தை நிறுத்தி அங்கு சுமுகமான நிலைமையை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒரு வழி கண்டு கொள்ளத் தவறினல் அங்கோலா நிலைமைக்கு வேறு வழிகளைக் கண்டுகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஆபிரிக்க நாடுகள் மேற்கொள்ள வேண்டிநேரிடும்" என்று கான ஜனதிபதி டாக்டர் நிக்ருமா கூறினர்.

ஆபிரிக்க நாடுகளிடையே இதர பல விஷயங்களில்கருத்து வேற்றுமை இருந்தாலும் அங்கோலாவில் போர்த்துக்கலின் அட்டூழியத்தை ஒழித்துக்கட்ட ஆபிரிக்க நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு பொதுவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று டாக்டர் நிக்ருமா கேட்டுக்கொண்டார்.

வட அட்லாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்திலிருந்து போர்ச்சுக்கலை வெளியேற்றி விட்டால் போர்ச்சுக்கலின் காலனி ஆதிக்கம் ஒருசில நாட்களில் வீழ்ச்சியடைந்துவிடும் என்று டாக்டர் நிக்ருமா கூறினர்.

கான பார்லிமெண்ட் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் அங்கோலாபற்றி மேற்கண்டவாறு கூறினர்.

## இன்ஷூரன்ஸ் கூட்டுஸ்தாபனம்

### இந்திய ஆலோசகர் இங்கு வருகிருர்

கொழும்பு, புதன்

இலங்கையின் புதிய இன்ஷூரன்ஸ் கூட்டுஸ்தாபனத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக இந்திய இன்ஷூரன்ஸ் கூட்டுஸ்தாபனத்தின் ஜெனரல் மனேஜர் திரு. ஏ. ராஜகோபாலன் அடுத்த மாதம் இலங்கை வருகிருர்.

கொழும்புத் திட்ட உதவியின் கீழ் இந்திய அரசாங்கம் திரு. ராஜகோபாலனை இலங்கையில் இரண்டு வருடங்களுக்குச் சேவை புரிய அனுப்புகிறது.

## காஷ்மீருக்கு யாத்திரிகர் அதிகரிப்பு

ஸ்ரீ நகர், மே 31

காஷ்மீருக்கு இப்பொழுது பெருந்தொகையான உல்லாசப்பிரயாணிகள் செல்கின்றனர். இப்பொழுது அங்கு 20,000 யாத்திரிகர்கள் சென்றிருப்பதாகவும் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் நாளொன்றுக்கு ஆயிரம் யாத்திரிகர்கள் காஷ்மீருக்கு வருகின்றனரென்றும் அறிவிக்கப்படுகிறது.

## சில்சாரில் ஹர்த்தால் முடிவடைந்தது

ஷில்லாங், மே 31

சில்சாரில் அரசாங்க காரியாலயங்களும் நீதிமன்றங்களும் நேற்று மீண்டும் செயல்பட ஆரம்பித்தன.

அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக வங்காள மொழியையும் அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி கச்சார் ஜில்லாவில் தோன்றிய கிளர்ச்சியின் விளைவாக சில்சாரில் கலகம் ஏற்பட்டது. இக்கலகத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பதினெரு பேர் மாண்டனர். பொலிசார் துப்பாக்கிப் பிரயோகத்தை ஆட்சேபித்து இம்மாதம் 19-ந்திகதி தொடக்கம் சில்சாரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

அஸ்ஸாம் ராஜ்ய மொழிப் பிரச்னை சம்பந்தமாக அஸ்ஸாம் ராஜ்ய தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி ஷில்லாங் வந்துசேர்ந்துள்ளார்.

திரு. சாஸ்திரி ஷில்லாங் வரும் வழியில் மேற்கு வங்க முதன்மந்திரி டாக்டர் பி. ராயைச் சந்தித்துப் பேசினர். தங்கள் சந்திப்பு பயனுள்ளதாக இருந்தது என்று திரு. சாஸ்திரி பின்னர் தெரிவித்தார்.

அஸ்ஸாம் ராஜ்ய மொழிப் பிரச்னைக்குச் சுமுகமான நிரந்தரமான ஒரு தீர்வு காண முயற்சி செய்யும்படி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கேட்டுக்கொளளும் தீர்மானமொன்று மேற்குவங்காள காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறியது.

சில்சார் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணைசெய்வதற்கு அஸ்ஸாம் அரசாங்கம் உயர்நீதிமன்றத்தைச் சேர்ந்த நீதிபதி கோபால்ஜி மெஹ்ரோத்ராவை நியமித்துள்ளது. ஆகஸ்ட் மாதம் 31 ந் திகதிக்கு முன் இவர் தமது விசாரணையை முடித்துக்கொண்டு தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## பங்களூரில் விவசாய பல்கலைக்கழகம்

மைசூர், மே 31

பங்களூரில் கிராம பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டத்தை மைசூர் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. ஆயிரம் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கக் கூடிய இவ்விவசாயப் பல்கலைக்கழகத்தில் விவசாய ஆராய்ச்சியிலும் விஸ்தரிப்புத் திட்டங்களிலும் பயிற்சியளிக்கப்படும்.

### மணிவாக்கு

இது என் நிலம் என்று கூறுப வரைப் பார்த்து நிலமங்கை நகைக்கின்ருள்.

—ஓர் அறிஞர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 19உ (1-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## யோகாசன சிகிச்சை

யோகாசனங்கள் மூலம் சிகிச்சை அளிப்பதை கேரள அரசாங்கம் அங்கீகரித்துள்ளதுடன், இச்சிகிச்சை முறையை அபிவிருத்திசெய்ய எல்லா ஆதரவும் அளிக்கத் தயாரென்று, கேரள சுகாதார அமைச்சர் கொல்லத்திலே ஒரு கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார். க்ஷயரோகத்துக்கு யோகாசன முறையில் சிகிச்சை அளிக்க அண்மையில் ஒரு ஆஸ்பத்திரியை அரசாங்கம் ஆரம்பிக்க இருக்கிறதாம். இது வரவேற்கத்தக்க செய்தியாகும்.

உடல்நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப் பலபல வைத்திய முறைகளுள்ளன. ஆயுர்வேதம், சித்தம், யூனனி, அலோபதி எனும் மேலைநாட்டு வைத்தியம். ஹோமியோபதி, இயற்கை வைத்தியம் முதலிய பல வைத்திய முறைகளில் மட்டுமன்றி யோகாசன முறையிலும் மக்களுக்கு நம்பிக்கை இருந்துவருகின்றது. மற்ற வைத்திய முறைகளில் குணமாகாத சில நோய்கள், யோகாசன முறையில் தீர்ந்துள்ளதாக கேள்விப்படுகின்றோம். மருந்து முதலியன இல்லாமல் சில அப்யாசங்கள் செய்ததின்மூலம் சிலர் நோய்களிலிருந்து விடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். இந்தியப் பிரதமர் நேருஜியும் தினசரி யோகாசனங்கள்செய்து, தமது தேக சுகாதாரத்தை நோய் வராமல் பாதுகாத்துவருகின்றார். மேலை நாடுகளிலும் இந்த யோகாசன முறை வெகுவாகப் பரவிவருகின்றது. பாரத நாட்டின் இப்புராதன முறையை இலங்கை அரசாங்கமும் அங்கீகரித்து இம்முறை மூலம் விரும்பிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஒழுங்கு செய்யவேண்டும். இதற்கு அதிக செலவு மாகாது.

நோய்களைக் குணப்படுத்துவதைவிட, நோயற்ற வாழ்வு வாழ யோகாசன முறை உதவுவதாகக் கருதி பலர் இப்பயிற்சி பெறுகின்றார்கள். நோயின்றி வாழ யோகாசனப் பயிற்சியை, இலங்கையில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மாணவ மாணவிகளுக்கு அளிக்க ஒழுங்கு செய்தல் மிக நன்மை தரும். ஆங்காங்கே தங்கள் சொந்த முயற்சியால் இதில் தேர்ச்சி பெற்றவர்கள் சிலருண்டு. இம்முறையில் நல்ல அனுபவமும் தேர்ச்சியும் பெற்றவர்களைக் கொண்டு, பயிற்சி நிலையங்களை ஆங்காங்கே அரசாங்கம் அமைத்து ஆதரிக்கலாம். பாடசாலைகளில்தேகாப்பியாசமுறையுடன் யோகாசன முறையையும் அரசாங்கம் புகுத்துமாயின், நம் மாணவ மாணவிகளின் சுகாதாரம் மேம்படுவதுடன், ஆஸ்பத்திரி நெருக்கடிகளும், செலவுகளும் பெரிதும் குறையக்கூடும்.

புதிய புதிய ஆஸ்பத்திரிகளையும், வைத்தியக் கல்லூரிகளையும் கட்டுவதைவிட, நோய்கள் வராமல் தடுப்பதில் அரசாங்கம் அதிக ஊக்கம் எடுக்க வேண்டும். நோய்கள் நம் உடலைத் தாக்காமல் தடுக்க யோகாசன முறைகள் பெரிதும் பாதுகாப்பாக இருக்குமென்று தெரிவிக்கப்படுவதால், இம்முறையை இலங்கையில் அங்கீகரித்து, இதைப் பரப்ப அரசாங்கம் எல்லா ஆதரவும் அளிக்க முன்வருவது பெரிதும் விரும்பத்தக்கதாகும்.

# கிழக்கிலங்கையில் குடிமுறைகள்

— ஏ. சி. எல். அமீர் அலி —

**கிழக்கிலங்கையில் இந்துக்களுடன் முஸ்லிம்கள் நெருங்கிப் பழகுதலினுல் இந்துக்களின் சில சமயஆசாரங்களும் சமூகப் பழக்க வழக்கங்களும் முஸ்லிம்களிடையே நிலவி வருகின்றதெனை இக்கட்டுரையாளர் கூறுகின்ருர். 'இந்து தருமம்' மாணவர் மலரிலிருந்து இதனை அனுவதித்துள்ளோம்.**

இலங்கையில் இன்று வாழும் முஸ்லிம்களில் மூன்றிலொரு பகுதியினர் கிழக்கிலங்கையிலே வாழ்கின்றனர். இவர்கள் 9-ம், 10-ம் நூற்ருண்டுகளில் இலங்கைக்கு வியாபார நோக்கமாக வந்த இந்திய வர்த்தக கூட்டத்தினரது சந்ததியென்று வரலாறு கூறுகின்றது. இவர்களது தாய்மொழி தமிழாகும். இலங்கையிற் பிற ஏழு மாகாணங்களிலும் எவ்வாறு சிங்கள மக்களிடையே முஸ்லிம்கள் சிதறிக் கிடக்கின்றனரோ அவ்வாறே கிழக்கு மாகாணத்திலும், முஸ்லிம்கள் தமிழ் மக்களிடையே கலந்து வாழ்கின்றனர். எனினும் பல கிராமங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்றனர். இதனுல் இப்பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பொன்று காணப்படுகின்றது. மதத்தினுல் இவர்கள் மாறுபடினும், பழக்கவழக்கங்களிலும், மொழியிலும், சம்பிரதாயங்களிலும், தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலோர் இந்து மதத்தினராவர். இந்துக்களுடன் முஸ்லிம்கள் நெருங்கிப் பழகுவதினுல் இந்துக்களின் சில சமய ஆசாரங்களும் சமூகப் பழக்கவழக்கங்களும், முஸ்லிம்களிடையே குடி கொண்டுள்ளன. இதனைக் கொண்டு மதக் கொள்கையில் கலப்பு உண்டென்று கூறமுடியாது. கொள்கைகளில் மதங்கள் வேறுபடுகின்றன. ஆனுல் கொள்கை அனுஷ்டானங்களில் ஏற்படும் சில கிரிகைகளில், இரு மதத்தினருக்கு மிடையே சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

இத்தகைய மாறுதல்களுக்கு தர்க்க ரீதியானதோ, தத்துவார்த்தமானதோ ஆதாரங்களைக் கூறமுடியாது. இவை சாதாரண நடைமுறையினுல் ஏற்படும் விளைவுகள் என்றுதான் கூற வேண்டும். இரண்டு பேர் மிகவும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்தால் ஒருவர் பழக்கத்தை மற்றவரும் கைக்கொள்ளுதல் இயல்பு. இதே உண்மையைத்தான் இங்கும் காணக்கிடக்கின்றது.

### இரு வழிமுறைகள்

கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் முக்கிய சமூக வழக்கங்களுள் "குடி" முறையும் ஒன்று. குடிமுறை அல்லது குடிவழி என்பது சரித்திரக் காலத்திலிருந்து அறியப்பட்டு வந்திருக்கின்றது. இது 'தாய்வழி முறை, தந்தை வழி முறையென்று இரு வகைப்படும். தாய் வழி முறையே காலத்தால் முந்தியது. தந்தை வழி முறை பிந்தியது. இன்று இரு வழிமுறைகளும் உலக முழுவதிலும் காணப்படுகின்றன. அரேபியரிடத்தில் காணப்படுகின்றது தந்தை வழி முறையே. இஸ்லாம், தந்தை வழி முறையிலேயே அரேபியருடைய சரித்திரத்தைக் கூறுகின்றது கீழ் நாடுகளில் இஸ்லாம் பரவினுலும் இந்த முறை நுழையவில்லை. கீழ்நாடுகளில் இன்று வரையும் தாய் வழி முறையே காணப்படுகின்றது. இலங்கையில் கீழ் மாகாணத்தில் குடியேறியவர்கள் அதிகமாகத் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள். இவர்கள் இங்குவரும் போது பெண்களுடன் வரவில்லை. இப்பகுதியிலிருந்து தமிழ்ப் பெண்களையே விவாகஞ் செய்தனர். அதிலும் இந்துக்களிடையேயுள்ள முக்குவப் பெண்களையே விவாகஞ் செய்தனர். முக்குவரிடத்தில் காணப்படும் குடிப்பெயரையே முஸ்லிம்களும் தமக்குரியதாக்கிக் கொண்டனர். நாளாவட்டத்தில் புதுக் குடிப்பெயர்களும் முஸ்லிம்களிடையே நுழைவதாயிற்று. பிற இடங்களிலிருந்து வந்த முஸ்லிம்கள் ஒரு கிராமத்திலுள்ள முஸ்லிம் பெண்களை விவாகஞ் செய்யும்போது, அல்லது பிற இடத்திலிருந்து ஒரு முஸ்லிம் குடும்பம் ஒரு முஸ்லிம் கிராமத்தில் நிலையாகி அக்கிராமத்துச் சனங்களோடு கலந்து வாழும்போது அப்புதுக் குடும்பத்தின் தலைவனின் சொந்தவூர் அல்லது தொழில் இவற்றைக்கொண்டு புதுப் பெயர்கள் தோன்றலாயின. உதாரணமாகக் கொழும்பார்குடி, மலையாளக்குடி, சம்மாங்காரக்குடி போன்றவை ஊர் தழுவி வந்த பெயர்களாகும். ஓடாவிகுடி, மேசனர்குடி போன்றவை தொழில்களிலிருந்து வந்த பெயர்களாகும். குடிமுறை பெண்வழியாகவே இருந்தாலும் குடிப்பெயர் ஆண்வழியாகவே இருக்கிறது பொதுவாக இன்ன குடியார் என்று சொல்லும்போது அவர்கள் இன்ன பெண்ணின் வழியாக வந்தவர்களென்று கருதப்படுவர். அப்பெண்ணுக்குப் பிறக்கும் ஆண் குழந்தையும் பெண் குழந்தையும் தாயின் குடிப்பெயரையே பெறும். இதனுல் பெண் சந்ததி இல்லாவிட்டால் குடி மறையும்.

### குடிமாறி விவாகம்

ஒரே குடிக்குள் ஓர் ஆண் விவாகஞ் செய்தல் அக்காலத்தில் நன்கு விரும்பப்படவில்லை. குடிமாறியே விவாகஞ் செய்வதை விரும்பினர். இந்தக் குடிமுறை கிழக்கிலங்கை முஸ்லிம்களின் சொந்த வழக்கல்ல. இவை இம்முஸ்லிம்கள் வதியும் கிராமங்களுக்கு அடுத்த தமிழ்க் கிராமங்களில் வதியும் தமிழ் மக்களிடையே காணப்படுவதொன்ருகும்.

இக்குடிமுறை மத ஆசாரங்களையும் பாதித்துள்ளது. வருடந்தோறும் பன்னிரண்டு இரவுகளுக்கு முஸ்லிம்களின் பள்ளிவாயில்களில் "மவ்லூது" ஓதுவது வழக்கம். இந்த விழாக்கள் குடிமுறை கொண்டே நடக்கும். ஒவ்வோரிரவிற்கும் ஒன்று அல்லது இரண்டு குடிகள் சேர்ந்து அதனை நடத்தும். இம்முறை தமிழ்க் கோயில்களில் நடக்கும் திருவிழாவையும் அதனை நடத்தும் குடிகளையும் ஒத்திருக்கின்றது. தமிழ் மக்களிடையே காணப்படும் குடிமுறை ஒழுங்கு முஸ்லிம்களின் குடிமுறை ஒழுங்கினை ஒத்திருப்பது ஆச்சரியப்படத்தக்கதாகும். இன்னும் இந்தக் குடிமுறையால் ஒருவரையொருவர் உயர்த்தியும் தாழ்த்தியும் குடும்பங்களுக்கிடையே பேசிக்கொள்வதைப் பார்த்தால் மேலும் ஆச்சரியம் கொடுக்கக்கூடியதாக இருக்கும். கிழக்கிலங்கை இந்துக்களிடையே காணப்படும் வண்

(5-ம் பக்கம் பார்க்க)

# இந்து தருமம்

"இந்து மாணவர்கள் தம் பழம் பெரும் சமயத்தினிடம் எப்படிப்பட்ட மனப்பாங்கு வைத்துள்ளார்கள்? பெரும்பாலான மாணவர்கள் ஓரளவு சமயக்கல்வியைப் பெற்றிருந்தாலும் அக்கல்வியைக் கொண்டு தம் சமய அறிவை மேன்மேலும் விருத்தி செய்து, பிறமதத்தினருக்கும் எம்மதத்தின் சால்பை எடுத்துக்கூறும் திறமை எம்மவரிடம் இல்லை. இதற்கு முக்கிய காரணம் எம்மிடம் இன்று தலைவிரித்தாடும் ஒழுங்கின்மை, பணிவின்மை, கட்டுப்பாடின்மை முதலிய விரும்பத் தகாத குணங்களேயாகும். இக்குணங்கள் இன்று மாணவ சமுதாயத்தை முன்னேற விடாமல் அவர்களை ஒரு தாழ்ந்த நிலைக்குக் கொண்டு செல்லுகின்றன. மேற் கூறிய மூன்று சமூக நோய்களாலும் எம்மாணவர் பீடிக்கப்படுவது வருந்தத்தக்கதொரு விஷயமாகும்"

இவ்வாறு இலங்கைப் பல்கலைக் கழகத்து இந்துமாணவர் சங்க வெளியீடாகிய **இந்து தருமம்** * குறிப்பிட்டிருக்கிறது.

நல்லெண்ணம், உயர்ந்த இலட்சியங்கள், குறிக்கோள்கள் முதலியன மாணவர்களிடையே மலர்ந்து நற் காரியங்களைச் செய்ய அவை தூண்ட வேண்டுமென இவ் வெளியீட்டின் ஆசிரியர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

இம்முறை 'இந்து தருமம்' மாணவர் மலராக வெளியிடப் பெற்றுள்ளது.

இந்துமதம், சைவ மறுமலர்ச்சியும் சம்பந்தர் சமயப் பிரசாரமும், சைவமும் சைவ சித்தாந்தமும், ஈழம் கண்டதோர் தமிழ் முனிவர், கலைத்தெய்வம், மஞ்சனமாட நீ வாராய், மார்கழியும் மங்கையரும், குயிலே கூறமாட்டாயா?, உடுக்கை ராஜா, கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே ஹிந்துக்களின் குடிமுறைகள், இந்து சமயமும் சமரசமும், அர்ச்சனை (சிறுகதை), பாண்டிருப்பிற் பாஞ்சாலி ஆகியவற்றை முறையே கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், ஆ. வேலுப்பிள்ளை, குன்றக்குடி அடிகளார், கு. அம்பலவாணப்பிள்ளை, சி. தில்லைநாதன், அ. சண்முகதாஸ், பாலகிருஷ்ணன், செ. கதிர்காமநாதன், "இராஜபாரதி", ஏ. சி. எல். அமீர்அலி, சி. பத்மநாதன், க. நவசோதி, ஞானம் ஆகியோர் எழுதியிருக்கின்றனர்.

இவை யாவும் நல்ல முறையில் அமைந்துள்ளன.

சென்ற ஆண்டு இந்து மாணவர் சங்கத்தின் ஆதரவில் பல்கலைக் கழகத்திலே சர்வ மத மகா நாடு ஒன்று நடைபெற்றது. அதில் பங்குபற்றிப் பேசிய அறிஞர்களின் கருத்துக்கள் ஆங்கிலப் பகுதியில் வெளியாகியுள்ளன.

டாக்டர் வி. பி. இராமசுவாமி ஐயர், சுவாமி சிவானந்தா, சுவாமி அரங்கநாதானந்தா, உட்பட அறிஞர்கள் பலர் சமய சம்பந்தமான கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியிருக்கின்றனர். பல்கலைக் கழக மாணவரின் இம்முயற்சி பாராட்டற்குரியது. மலர் புகைப் படங்களுடன் அழகாக வெளியிடப்பெற்றுள்ளது.

**HINDU DHARMA:** *

**இந்து தருமம்.**

**ஆசிரியர்கள்:** செல்வி சி. அமிர்தலிங்கம், ச. ஈஸ்பரதாசன். **வெளியீடு:** இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை; **விலை** ரூ. 3.

## ஐயாறன் எழுதுவது

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தர் இப்போது ஹாங்காங்கிலே "டைம் டேபிள்" போட்டு செய்துவரும் வேலை முறைகளைப் பார்த்தேன்.

பல இடங்களிலே ஆசனப் பயிற்சி வகுப்புகள், தியானம், பிரசங்கங்கள், சூரிய நமஸ்காரம் முதலியவற்றை ஹாங்காங் திவ்யஜீவன சங்கத்தின் ஆதரவிலே செய்து வருகின்ருர். அச்சங்கத்தின் தலைவர் சீனரான பி. கே. எஸ். பியூங். சீனர்களும் இந்தியர்களும் நிர்வாக சபையிலுள்ளனர். சீனர்களிடையிலும் ஒரு யோகிராஜ் இருக்கின்ருர். அவர் பெயர் ஆ. யாங். ஹோமன்!

* * *

சென்ற ஏப்ரல் மாதம் 26-ம் திகதி இரவு 7-30க்கு ஹாங்காங்கைச் சேர்ந்த கோலூன் விமானத்துறையில் யோகிராஜ் இறங்கியதும் "ஹப்பி வாலி" என்ற இடத்திலுள்ள இந்து ஆலயத்தில் அவருக்கு ஓர் வரவேற்புபசாரம் அளிக்கப்பெற்றதாம்

மறுநாள் அங்குள்ளஒருசைவ ஓட்டலில், விசேஷ வரவேற்புக் கமிட்டியினர் ஒரு விருந்துபசாரமளித்தனர். ஒவ்வொரு நாளும் ஓய்வின்றி வேலை. யோகாசனங்கள் மூலம் சிலருக்கு அவர் சிகிச்சையளிப்பதாயும், பலரைக் கண்டு பேசி வருவதாயும், ஹாங்காங்கிலேயே அவரை இருந்து விடுமாறும் அங்கு ஆசிரமம் அமைத்துத் தருவதாக அன்புடன் கூறுவதாயும் தெரிகிறது.

சுவாமி மூலம் இலங்கை, ஹாங்காங், இந்தியா, இம் மூன்று நாடுகளுக்கும் நல்ல தொடர்பு ஏற்பட்டுவருகின்றது.

'இலங்கைக்குத் திரும்பஇன்னும் ஒரு வருஷமாகுமா? 13 மாதங்களாகும் என்று 'ஈழநாடு' பத்திரிகையில் போட்டிருந்ததே' என்று ஓர் அன்பர் கவலையுடன் கேட்டார். அது அச்சுப் பிழை 3 என்பது 13 ஆகிவிட்டது! மூன்று மாதங்களில் அவர் திரும்புவதாக ஏற்பாடென்றும், ஏற்கெனவே 6 வாரம் முடிந்துவிட்டதால் இன்னும் 6 வாரங்களில் திரும்பலாமென்றும் அறிகிறேன்.

* * *

நேற்று லண்டன் "ராய்ட்டர்" செய்தி ஸ்தாபன நிருபர் மிஸ்டர் ஸிட்னி வீலண்ட், யாழ்ப்பாணம் பார்க்க வந்த இடத்தில் என்னையும் வந்து பார்த்தார்.

ஒரு வாரத்தில் அவசர நெருக்கடியை வாபஸ்பெற்ருல் என்ன ஆகும்? என்று என்னைக் கேட்டார். "நான் ஒரு பேப்பர்காரன். அரசியல் தலைவர்களிடம் கேளுங்கள், பிரதமமந்திரியைக் கொழும்பில் சந்தித்துப்பேசினீர்களா?" என்று கேட்டேன்.

பிரதமரைப் பார்க்கவில்லை என்றும் நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைப் பார்த்ததாயும் கூறினர். மொழிப்பிரச்சினையைத்தீர்க்க முயற்சிகள் செய்யப்படுவதாயும், இது பற்றிச் சில விபரங்களும் கூறினர். ஆனுல் பத்திரிகைத் தணிக்கை காரணமாக அவற்றை இங்கு எழுத என் பேனு தயங்குகிறது. அவர் இன்று புதுடில்லிக்குப் புறப்படுகின்ருர்.

* * *

நேற்று ஒரு அன்பர்வந்தார். தமது கிராமத்திலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தில் ரூ. 15 ஆயிரம்வரை மோசடி நடந்திருப்பதாயும், இரகசிய பொலிஸுக்குப் புகார் செய்து இரண்டு மாதங்களாகியும் கேள்விமுறை யில்லையென்றும் தெரிவித்தார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சில மிகமேலான பணியைச் செய்துவருகின்றன. ஆனுல் பலவற்றிலே சுரண்டல் பெருச்சாளிகள் இருப்பதாக

(5ம் பக்கம் பார்க்க)

# சாக்கில் கிடந்த பிரேதம்

## வீட்டிலும் காரிலும் இரத்தக்கறை!

### மூவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், வியாழன்

நீர்வேலியில் ஒரு புதருக்குள்கிடந்தசாக்கினுள் பிரேதம் கிடந்தது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட ஊரெழுவைச் சேர்ந்த ஒய்வுபெற்ற ஓவர்சியர் கந்தப்பிள்ளை செல்லையா, அவரது வேலைக்காரர் சுப்பையா மாடாசாமி, மோட்டார் கார் சாரதி முத்துசாமி ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையால் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீர்வேலி பழையடச் வீதியில் ஒரு புதருக்குள் சாக்கு ஒன்று கட்டப்பட்டுக் கிடந்ததை பொலிசார் கண்டெடுத்துப் பார்த்தபொழுது அதற்குள் அழுகிய நிலையில் ஒரு பிரேதம் இருக்கக்காணப்பட்டதும், பின்னர் அது ஊரெழுவைச் சேர்ந்த மாரிமுத்து மார்க்கண்டுவின் பிரேதம் என அடையாளம் காணப்பட்டது.

சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு. வி. எஸ். முருகேசு நேற்று சாட்சியமளித்தார்.

இக் கொலை பற்றி விசாரணை நடத்துமாறு இன்ஸ்பெக்டர் தனக்கு உத்தரவிட்டதன் பேரில் பிரேதம் கிடந்த இடத்துக்கு சில பொலிஸ்காரருடன் சென்று விசாரணை செய்ததாகக் கூறினர்.

",கந்தப்பிள்ளை செல்லையாவின் வீட்டுக்குச் சென்று பார்த்த பொழுது கதவிலும் வேறு சில இடங்களிலும் இரத்தக் கறை படிந்திருந்ததைக் கண்டோம். முத்துச்சாமியின் மோட்டார் காரைப் பரிசோதித்துப் பார்த்தபோது அதிலும் இரத்தக்கறை படிந்திருந்ததைக் கண்டோம். செல்லையாவின் வீட்டிலிருந்த கோடரிப் பிடியிலும் இரத்தக் கறை படிந்திருந்ததைக் கண்டோம்" என்று சார்ஜன்ட் முருகேசு தமது சாட்சியத்தில் கூறினர்.

இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொருள்களை அரசாங்க பரிசோதனைக்கு அனுப்புமாறு சார்ஜன்ட் முருகேசு கேட்டுக்கொண்டார்.

ஜூன் மாதம் 10 ந் திகதி வரை சந்தேகப் பேர்வழிகளை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் அரசு வால்டன் உத்தரவிட்டார்.

திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் சந்தேகப் பேர்வழிகளின் சார்பில் ஆஜரானர்.

---

## விளையாட்டுக் கழகம் அங்குரார்ப்பணம்

அக்கரைப்பற்று, புதன்

தேசிய விளையாட்டுக்களை ஒருஉன்னத நிலைக்குக்கொண்டு வருவதற்காகஅக்கரைப்பற்றில் ஒரு விளையாட்டுக் கழகம் அக்கரைப்பற்று மத்திய கிராமச் சங்க அங்கத்தவர் ஜனப் எஸ். ஏ. ஐ. மவுலானு தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானமாக மருதவட்டான் குளப்பகுதியை அரசாங்கத்திடமிருந்து பெற்று ஒரு நவீன விளையாட்டுத்திடலாக அதை அமைக்கவேண்டுமென்ற ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## ஆணுக மாறும் ராஜம்மாள்

### ஆப்ரேஷனுக்கு மறுத்துவிட்டாள்

கோயமுத்தூர், மே 30

ஆணுக மாறிக்கொண்டு வரும் வால்பாறையைச் சேர்ந்த 18 வயதுள்ள ராஜம்மாள், இன்று கோவை ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பப்பட்டுவிட்டாள்.

அடுத்த வியாழக்கிழமையன்று, ராஜம்மாளுக்கு ஆப்ரேஷன் செய்வதாகயிருந்தது. ஆனல் ஆப்ரேஷன் செய்ய இவர் மறுத்துவிட்டதாலேயே, ஆஸ்பத்திரியினின்றும் வெளியேற்றப்பட்டார்.

---

## 10 ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள்

### வருடமுடிவுக்குள் நிறுவப்படும்

நிவித்திகல, செவ்வாய்

"இந்த வருடம் முடிவதற்கு முன்னர் பத்து ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளைத் திறக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆயூர்வேத மசோதாவிலுள்ள சிபார்சுகள் முழுவதும் அமுல் செய்யப்பட்டதும் 584 ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள் அமைக்கப்பட்டுவிடும் என்று சுகாதார அமைச்சின் உதவி நிரந்தரக்காரியதரிசி திரு. டபிள்யு. ஜே.ஆர். நவகொமுவ கலவானு மகா வித்தியாலயத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆயுர்வேத மசோதாவை அமுல்நடத்தியதும் ஆஸ்பத்திரி பற்ருக்குறையும் வைத்திய உதவி தட்டுப்பாடும் தீர்ந்துவிடும் என்று திரு. நவகொமுவ கூறினர்.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பல புகார்கள் கிடைக்கின்றன. இதுபற்றி உடனுக்குடன் விசாரித்து, தக்க நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்கவேண்டும். இன்றேல், இச்சங்கங்களில் மக்கள் நம்பிக்கை இழந்து அச்சங்கங்களும் நசித்துவிடக் கூடும்.

* * *

இந்தியப் பத்திரிகையிலே ஒரு படம்பார்த்தேன். சென்னை முதல் மந்திரி காமராஜர், நேருஜிக்கும் காங்கிரஸ் தலைவர் சஞ்சீவிரெட்டிக்கும் இடையே அமர்ந்து, மோட்டாரிலே துர்க்காபூர் காங்கிரஸ் கூட்டத்துக்குச் செல்லுகிருர்.

அவருக்கு நேருஜியிடம் எவ்வளவு நெருக்கமும் செல்வாக்குமுள்ளதென்பதை அப்படம் காட்டியது.

காமராஜருக்கு ஆங்கிலப் படிப்புக் கிடையாது. அப்படி இருந்தும் ஏழு வருடங்களுக்கு மேல் அவர் சென்னை ராஜ்ய பாரத்தை எப்படி நடத்திச் சமாளித்து வருகிருர்? என்று சென்னையிலிருந்து இங்கு வந்திருந்த ஓர் அன்பரைக் கேட்டேன். காமராஜருக்கு ஆங்கிலம் நன்ருகப் புரியுமென்றும் பல "பைல்"களையும் தாமே படித்து குறிப்பு எழுதுவாரென்றும், ஆங்கிலத்தில் சம்பாஷணையும் செய்வாரென்றும் தெரிவித்தார்.

ஆங்கிலம் படிக்காதவரும் பெரிய பதவிகள் வகிக்கலாமென்பதற்கு காமராஜர் ஓர் எடுத்துக்காட்டு!

---

## ரூ. 2,50,000 பெறுமதியான தங்கக்கட்டிகள் பிடிபட்டன

கல்கத்தா, மே 30

டோக்கியோவிலிருந்து புறப்பட்டுவந்த ஒரு பிரெஞ்சு விமானத்தில் பிரயாணம் செய்த இத்தாலிய தம்பதிகளிடமிருந்து, ஒவ்வொன்றும் 2 இருத்தல் எடையுள்ள 27 தங்கக் கட்டிகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

இந்தப் பிரெஞ்சு விமானம் டம்டம் விமான நிலையத்தில் வந்திறங்கிய சமயம்தான் இத் தங்கக்கட்டிகளைகைப்பற்றினர். இவைகளில் அந்நிய நாட்டு அடையாளக்குறிகள் இருந்தன.

இதைவிட 2 படகுக்காரர்களிடமிருந்து மொத்தம் 160 தோலா எடையுள்ள 10 தங்கக் கட்டிகளும், ரயில்வே பாதுகாப்புப்படை ஊழியர்களிடமிருந்து 13 தங்கக்கட்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தமதிப்பு ரூ. 2,50,000 க்கு அதிகமாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

---

## "வீடுகளுக்கு சந்தோஷப் பணம்"

### பெறுவதற்கெதிராக நடவடிக்கை

கொழும்பு, புதன்

வீட்டுச்சொந்தக்காரர்களின் படியிலிருந்து வாடகைக்கிருப்பவர்களைப் பாதுகாக்கும் நோக்கமாக ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சு மகஜர் ஒன்றைத் தயாரித்து வருகிறது.

இலங்கை முழுவதிலும் வாடகைக் கட்டுப்பாட்டு உத்தியோகஸ்தர்களை நியமித்து வீட்டுச் சொந்தக்காரர்கள்வாடகைக்கு இருப்பவரிடம் கடுமையாக நடந்து கொள்ளாது பாதுகாக்கும் முறையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சந்தோஷப்பணம் பெறுதல் போன்ற மோசடிகளைத் தவிர்க்க சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று அமைச்சு திட்டம்வகுத்துள்ளது.

---

## கிழக்கிலங்கையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் மடியும், முஸ்லிம்களிடையே காணப்படும் மரைக்காரன் காரக்குடியும் சமம். ஆனல் இந்துக்களிடையே இருக்கும் சாதி வேறுபாட்டையடுத்த குடிமுறை முஸ்லிம்களிடையே காணப்படவில்லை.

### சமய ஆசாரம்

இந்து ஆலயங்களில், திருவிழா நாட்களில் மேளங்களும் பட்டாசுகளும் முழங்குதல் போல, 'மவ்லூது' இரவுகளில், பள்ளிவாசல்களிலும் பட்டாசுகளும் "பக்கீர்"களும் முழங்கும். விழா நாட்களில் கோயில்களில் காணப்படும் குதூகலம் "மவ்லூது" இரவுகளில் பள்ளிவாயில்களில் காணப்படும். இவ்வழக்கத்திற்கும் இஸ்லாமிய மதத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை. இந்துக்களின் சமய ஆசாரம் இஸ்லாமியரிடையே புகுந்துள்ளது இதனல் தெளிவாகின்றது.

குடிமுறை, இந்துக்களிடையே எவ்வளவுக்கு வலிமையாகப் பின்பற்றப்படுகிறதோ அதே வலிமையோடு முஸ்லிம்கள் பின்பற்றவில்லை. குடிமாறித் திருமணஞ் செய்தல் முஸ்லிம்களிடையே நிலவுதல் போலத் தமிழ் மக்களிடையே நிலவவில்லை. வேறுபாடுகள் எவ்வாறிருப்பினும் கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே நிலவும் குடிமுறை, அப்பகுதி முக்குவத் தமிழரின் குடிமுறையென்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

---

## யாத்திரிகர் இலாகாவை பிரதமர் ஏற்பார்

கொழும்பு, புதன்

யாத்திரிகர்கள் இலாகாவை பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா மேற்கொள்ளவிருக்கிருர். இந்த இலாகா பாதுகாப்பு, வெளிநாட்டு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டால் அதை நல்லமுறையில் அபிவிருத்தி செய்யமுடியும் என்று போக்குவரத்து மந்திரியின் யோசனை பேரில் பிரதமர் அதன் பொறுப்பை ஏற்றதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாற்றம் இவ்வாரம் பிரசுரிக்கப்படும் அரசாங்க வர்த்தமானியில் வெளியாகும்.

---

## 4500 ஏக்கர் நீர்ப்பாசனம்

கொழும்பு, புதன்

அம்பலாங்கொடை — பலப்பிட்டி தொகுதியில் 4500 ஏக்கர் நெல் வயலுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கும் இரு திட்டங்கள் ரூ. 9 லட்சம் செலவில் மேற்கொள்ளப் பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

---

## கைத்தொழில் கணக்கெடுப்பு விரைவில் ஆரம்பம்

கொழும்பு, புதன்

நாட்டிலுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு கைத்தொழில் ஸ்தாபனங்கள் பற்றி ஜனக்கணித இலாகா சீக்கிரம் கணக்கெடுப்பு நடத்தும். இ்ன சம்பந்தமாக ஏற்கனவே செய்யப்பட்ட ஒழுங்கின்படி நாட்டின் பல பாகங்களுக்கும் அதிகாரிகள் சென்று பெரிய சிறிய கைத்தொழில்கள்பற்றிய புள்ளி விபரங்களைத் திரட்டுவார்கள்.

---

## கைப்பந்தாட்டத்தில் இமையாணன் வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

ஞாயிறு பிற்பகல் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் இமையாணன் கோஷ்டி வதிரிபொம்பேஸ்கோஷ்டியைத் தோற்கடித்தது.

---

## தமிழ்மொழியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**காலி மாவட்டம்**

| | |
|---|---|
| என்தோட்டை வளலை | |
| வெற்றி கோறளை தெற்கு | 1 |
| நான்கு கிறவன்ஸ் | 2 |

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

| | |
|---|---|
| கிறுலாபற்று மேற்கு | 1 |

**புத்தளம் மாவட்டம்**

| | |
|---|---|
| பிட்டிகல் கோறளை வடக்கு | 6 |
| புத்தளம் பற்று, நான்கு கிறவன்ஸ் | 7 |
| கற்பிட்டி | 12 |
| தமிழ்கற்பற்று | 1 |

**திருக்கோணமலை மாவட்டம்**

| | |
|---|---|
| ஒடியார் பற்று | 9 |
| தம்பலகாமம் | 6 |
| கட்டுக்குளம் பற்று | 6 |
| திருக்கோணமலை நகர் கிறவன்ஸ் | 6 |

**குருணுகலை மாவட்டம்**

| | |
|---|---|
| வன்னிகூற்பற்று | 2 |
| கிரியலை பற்று | 3 |
| லாஉடைவில்ல கற்பற்று | 1 |
| கட்டுகம்பொலை | 3 |

**யாழ்ப்பாண மாவட்டம்**

| | |
|---|---|
| நெடுந்தீவு | 3 |
| தீவுகள் | 16 |
| யாழ்ப்பாணம் பிரிவு | 12 |
| வலிகாமம் மேற்கு | 17 |
| வலிகாமம் வடக்கு | 20 |
| வலிகாமம் கிழக்கு | 10 |
| தென்மராட்சி | 22 |
| வடமராட்சி | 25 |
| பச்சிலப்பள்ளி | 11 |
| பூநகரி | 8 |
| கராச்சி - துணுக்காய் | 8 |

---

## முன்னுள் கமிஷனருக்கு 'தண்டம்'

### ஆடிட்டர் ஜெனரல் உத்தரவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் நகரசபை முன்னுள் கமிஷனர் திரு. கே சண்முகம் தமது "கவனக்குறைவினலும், ஒழுங்கீனத்தினலும்" நகரசபைக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாகக் கூறி அவர் ரூ. 3466 தண்டம் செலுத்த வேண்டுமென்று ஆடிட்டர் ஜெனரல் கேட்டிருக்கிருர்.

10764 இலக்க வழக்குக்காக யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோர்ட்டுக்கும் பின்னர் சுப்றீம் கோர்ட்டுக்கும் அப்பீல் செய்த வழக்குச் செலவினல் யாழ்ப்பாண மாநகரசபைக்கு ஏற்பட்ட நஷ்டமே இத்தொகை.

1954-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பெரியகடையிலுள்ள 27-ம் இலக்க கடைப்பங்காளர் ஜனப். மிஸ்கின் சாகிப் என்பவரை வெளியேற்றியதைத் தொடர்ந்தே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

---

## கிபின் நியமனத்துக்கு ஆட்சேபம்

கொழும்பு, புதன்

லண்டன் போக்குவரத்துச் சபை உப டைரக்டரான திரு. ஜே. எச். கிபின், இ. போ. ச. வேலை சம்பந்தமாக விசாரணை நடத்தவிருக்கும் கமிஷனில் ஒரு அங்கத்தினரால் நியமிக்கப்பட்டிருப்பதை பொது போக்குவரத்து பிரயாணிகள் சம்மேளனங்கள் ஆட்சேபிக்க முடிவுசெய்துள்ளன.

---

## ஒழுங்கைகளின் பெயர்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உதவி மேயர் திரு. என். டி. செல்லத்துரையால் கொண்டுவரப்பட்டது. இப்பிரேரணையை திரு. பி. எம். ஜோன் ஆமோதித்தார்.

திரு. கே. எஸ். நடராஜா, யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்தி சம்பந்தமாக ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:- யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கர்ப்பவதிகள் ஆடுகளைப் பட்டியில் அடைப்பதைப்போன்று அடைக்கப்பட்டுள்ளனர். பிள்ளைப்பெற்ற மூன்ருவது நாளிலேயே தாய்மார்கள் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிடுகின்றனர். இதனல் அவர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்" என்ருர்.

இப்பிரேரணையை திரு. எம். எம். சுல்தான் ஆமோதித்தார், திரு. எம். ஜோசேப் இதுபற்றிப் பேசுகையில், நகரசபையால் நடாத்தப்படும் பிரசவ விடுதிகளுக்கு டாக்டர் ஒருவர் சென்று பார்வையிட்டால் ஆஸ்பத்திரியில் இவ்வித நெருக்கடி ஏற்படாது எனக் கூறினர்.

"சின்னக்கிணறு ஒழுங்கை" "ஸ்ரீ பாத அவென்யு" எனவும், ஸ்டான்லிக் கல்லூரிக்கு முன்னுலுள்ள ஒழுங்கைக்கு 'புவனம் அவென்யு' எனவும் புங்கங்குள வீதியிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கைக்கு 'ஞானப்பிரகாச ஒழுங்கை' என்றும் ராஜேஸ்வரி வீதியிலிருந்து திருமகள் ஒழுங்கைக்குச் செல்லும் ஒழுங்கைக்கு 'கந்தையா ஒழுங்கை' என்றும் திருமகள் ஒழுங்கையிலிருந்து கந்தையா ஒழுங்கைக்குச் செல்லும் ஒழுங்கைக்கு 'சுப்பிரமணியம் ஒழுங்கை' என்றும் 'சின்னலக் கண்டு ஒழுங்கை' "முத்துச்சாமி ஒழுங்கை" எனவும் "ஆர்த்திக்காடு வீதி" "பொன்னம்பலம் வீதியாகவும்" மாற்றவேண்டுமென்றும் அப்பிரேரணை கோரியது.

# அங்கோலா: ஆபிரிக்காவின் பலிபீடம்!

— டி. எம். எம். —

அங்கோலா. ஆம். இந்த நான்கெழுத்துச் சொல்தான் இன்று ஆபிரிக்காவின் பலிபீடம். கறுப்பர்களின் செங்குருதியைக் காட்டாற்று வெள்ளமாகப் பாயவிட்டு, இரத்த வெறியால் கொதிக்கிறது போர்த்துக்கேய ஏகாதிபத்தியம். படுகொலை! எங்கும் படுகொலை!! அங்கோலாவிலுள்ள போர்த்துக்கேய துருப்புக்களுடன், அங்குள்ள போர்த்துக்கல் வெள்ளையர்களும் சேர்ந்து கொண்டு, கறுப்பர்களைக்கண்டபடி சுட்டுத்தள்ளி வஞ்சம் தீர்த்து வருகிறார்கள். காரணம் கறுப்பர்கள் சுதந்திர உணர்ச்சி பெற்றதே. கறுப்பருக்குச் சுதந்திரமா? "சுட்டு வீழ்த்தியே புத்தி வந்திடச் செய்குவேன். குத்திக் கொல்லுவேன்" என்று பாரதியின் வாக்கால், பழி தீர்க்கிறது ஸலஸாரின் சர்வாதிகாரம். ஆனால் 500 ஆண்டு ஏகாதிபத்தியம் அங்கு அழிந்து வருவதை இன்னும் அது உணரவில்லை.

மண்ணாசையால் உந்தப்பட்டு கடல்கடந்து நாடு பிடித்து, காலனியை முதலில் நிலைநாட்டிய பெருமை போர்த்துக்கலுக்கே உண்டு. ஏகாதிபத்தியத்தின் கடைசி நிலைக்களனை விளங்கப்போகும் பெருமையும் இச்சின்னஞ் சிறு போர்த்துக்கலுக்காய்த்தான் இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆபிரிக்காக் கண்டத்தில் அதற்குச் சாவுமணி அடித்து வருவது அங்கோலா தான் என்பதில் சந்தேகம் வேண்டாம். பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய ஏகாதிபத்தியங்களின் உதாரணத்தை போர்த்துக்கலும் பின்பற்றியே ஆகவேண்டும். இதுவே சரித்திரம் கூறும் உண்மை.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் இன்னும் பல திட்டுக்களை போர்த்துக்கல் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. கோவா, டைமோர், மாக்கோ ஆகியன ஆசியாவில் உள்ள காலனிகள், ஆபிரிக்காவில் அங்கோலா, மொஸாம்பிக், போர்த்துக்கேய கினியா ஆகியவற்றைத் தன் வசம் கொண்டிருக்கிறது அது.

போர்த்துக்கல் ஏகாதிபத்தியத்துக்கு இப்போது அங்கோலா ஒரு சவாலாக விளங்குவதைத் தொடர்ந்து, ஆபிரிக்காக் கண்டத்திலிருந்தே அது துரத்தப்படும் நிலைமைக்கும் வந்து விட்டது.

### வெள்ளையர் 2 லட்சம்

அங்கோலாவில் வசிக்கும் 50 லட்சம் மக்களில் 2 லட்சம் பேரே வெள்ளையர்கள். இந்த வெள்ளையர்களிலும்கூட பாதிக்கு மேற்பட்டவர்கள் போர்த்துக்கலின் தூண்டுதலினால் அங்கு குடியேறியவர்கள்.

ஐரோப்பாவிலுள்ள போர்த்துக்கல் நாட்டிலேயே ஜனநாயகம் ஸலஸாரின் காலடியில் மிதிக்கப்பட்டுக் கிடக்கிறது. இந்நிலையில் அடிமை நாடுகள் எப்படியிருக்கும் எனச் சொல்லத் தேவையில்லை. பிரதம மந்திரி அண்டோனியோடா ஒலிவீரா ஸலஸார்தான் போர்த்துக்கலில் சட்டத்தை ஆக்கவும், அழிக்கவும் சர்வ வல்லமை பெற்ற சர்வாதிகாரியாக விளங்கி வருகிறார்.

### ஜனநாயகம் சிரிக்கிறது

அங்கோலாவின் தலைநகரான லுவண்டா அட்லாண்டிக்கிலுள்ள அழகு மிக்க நகரமாகும். இங்கு ஸலஸாரின் ஏகப்பிரதிநிதியான கவர்னர் ஜெனரல் ஸில்வா டவாரிஸ் ஆட்சி நடத்துகிறார். அவருக்குதவியாக நியமன ஆலோசனைச் சபை ஒன்றும், ஒரு சிலரால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்ட பொம்மை சட்டசபை ஒன்றும் இருக்கிறது. 50 லட்சம் மக்கள் கொண்ட அங்கோலாவில் வெள்ளையர்கள் மட்டுமே வாக்காளர்கள். அவர்கள் தான் லிஸ்பன் சட்டசபைக்கு இரண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறார்கள் என்றால் ஜனநாயகம் எப்படி அங்கு செயல்படுகிறது என்பதை அறியமுடியும். அதைவிட விசேஷம், அங்கோலாவிலுள்ள போர்த்துக்கேய வெள்ளையர்கள், லிஸ்பனிலுள்ள ஸலஸாரின் ஆட்சியை எதிர்க்கிறார்கள் என்பதே. சமீபத்தில் நடந்த போர்த்துக்கல் தேர்தலில் அங்கோலா வெள்ளையர்களில் 60 சத விகிதத்தினர் ஸலஸாரின் பரம வைரியான ஜெனரல் ஹம்பர்ட் டெல்காடோவுக்கு வாக்களித்தனர். சமீபத்தில் "சாந்தா மரியா" என்ற போர்த்துக்கல் கப்பலை நடுக்கடலில் வைத்துக் கைப்பற்றக் காரணமாய் இருந்தவர், தற்போது பிரேஸிலில் அஞ்ஞாத வாசம் புரியும் இந்த டெல்காடோதான் என்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம்.

அங்கோலாவிலுள்ள போர்த்துக்கேயர்களில் வர்த்தகர்களும், சாதாரண பதவியில் இருப்பவர்களும், அறிவாளிகளும், கத்தோலிக்க பாதிரிகளும் ஸலஸாரின் ஆட்சியை எதிர்ப்பவர்கள். மிகுதி கொஞ்சப்பேர்தான் ஸலஸாரின் தயவை நம்பியிருப்பவர்கள். அங்கிருக்கும் வெள்ளையர்களில் டல்காடோவை ஆதரிப்பவர்கள், ஆபிரிக்க பிரதிநிதித்வத்துடன் அங்கோலாவுக்கு உள்நாட்டு சுயாட்சி வேண்டுமெனக் கோருகின்றனர். ஆனால், கறுப்பர்களில் படித்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை தரப்படவேண்டுமென்று கூறி, தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டும் ஆர்வமே அவர்களிடம் அதிகம்.

### படுகொலை

சமீப காலத்தில் ஏற்பட்ட கறுப்பர்களின் விடுதலை இயக்கம் இவ்வாண்டு உச்ச நிலையை அடைந்தது.

இதைத் தொடர்ந்து அங்குள்ள ஐரோப்பியர்கள் தானே வெடிக்கும் ஆயுதங்களைக் கொண்டு அங்கோலா கறுப்பர்களைக் கண்டபடி சுட்டுத்தள்ளி வருகிறார்கள்.

அங்கோலாவிலுள்ள சிறிய போர்த்துக்கல் படை இவ்வித ஆயுதங்களைக் கொண்டு மக்களைக் கண்டபடி சுட்டுக்கொன்றும், கிராமங்களைக் கொளுத்தியும் அட்டூழியம் புரிந்துவருகிறது. இதுவரை 1000-க்கு மேற்பட்ட ஐரோப்பியர்களும், 35000-க்கு மேற்பட்ட ஆபிரிக்கர்களும் பரஸ்பர தாக்குதலால் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்த அட்டூழியத்துக்குப் பயந்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆபிரிக்க அகதிகள் காங்கோவுக்கு ஓடிவிட்டனர். ஐரோப்பியர்கள் பலர் தங்கள் தாய் நாடான போர்த்துக்கலுக்கு ஓடினர். அங்கோலா முழுதும் படுகொலையும், அட்டூழியமும், இரத்தப் பெருக்கும் கண்கூடு. ஏராளமான ஆபிரிக்கர்கள், சிறை பிடிக்கப்பட்டு அட்லாண்டிக்கிலுள்ள அடிமைகள் முகாமான ஸாடோமிக்கும், மற்றும் 4 பெருஞ்சிறைகளுக்கும் அனுப்பப்பட்டனர். அங்கு கண்டகண்டபடி இம்சித்துச் சாகடிக்கப்பட்டனர்.

### தேசிய இயக்கங்கள்

தேசிய இயக்கங்களில் அங்கோலா மக்கள் யூனியன்தான் பிரதானமானது. இதன் தலைமைக் காரியாலயம் காங்கோவிலுள்ள லியப்போல்ட்வில்லியில் இருக்கிறது. 36 வயதான ஹோல்டன் ராபர்ட்டோ இதற்குத்தலைவர். காங்கோவில் சிவில் அதிகாரியாய் இருந்த ராபர்ட்டோ, தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை அங்கோலாவுக்கு வெளியிலேயே கழித்திருக்கிறார். அங்கோலா விடுதலையடைந்தால் இவரே அதிகாரத்துக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கினியில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்ட "சுதந்திர அங்கோலா புரட்சி முன்னணி" அதற்கடுத்த முக்கியத்துவம் வகிக்கிறது.

இதன் தலைவரான மரியோ அண்டராடே, ஒரு பிரபல கம்யூனிஸ்டாகும். காங்கோவில் வசிக்கும் 60,000 அங்கோலியர்களில் பெரும்பாலோர் முன் சொன்ன ராபர்ட்டோவை ஆதரிப்பவர்கள்.

அங்கோலாவின் 48 லட்சம் கறுப்பர்களிலும், 2 லட்சம் வெள்ளையர்களிலும் 30 சத விகித வெள்ளையர் குழந்தைகளும், 4 சத விகித கறுப்பர் குழந்தைகளும் ஆரம்ப பள்ளிகளுக்குச் செல்கின்றனர். உயர்தரக் கல்வி பயில்பவர்கள் அபூர்வமாகவே இருக்கிறார்கள்.

அங்கோலாவின் ஏற்றுமதி வர்த்தகத்தில் 40 சத விகிதம் கோப்பியாகும். 20 சத விகிதம் வைரங்களின் ஏற்றுமதி. மிகுதி உலோகப் பொருட்களின் ஏற்றுமதி.

அங்கோலா படுகொலை இன்று உலகெங்கும் எதிரொலிக்கிறது. ஸலஸாரின் உள்நாட்டு விஷயமாக இன்னும் இதைக் கருத, உலகம் தயாராய் இல்லை. ஆபிரிக்காவில் அனல் காற்று வீசுகிறது. இந்தச் சூறாவளியில் ஏகாதிபத்திய மகுடம் இருந்த இடம் தெரியாமல் மடிந்துவிடும். பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன், ஆபிரிக்காக் கண்டத்தில் வீசும் புயலைப்பற்றி, அவரது தென்னாபிரிக்க சஞ்சாரத்தில் அறிவுறுத்தியதை போர்த்துக்கல் ஏற்கவேண்டும். பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி சில தினங்களுக்கு முன் லிஸ்பன் ஆதிக்கத்துடன் பேசியிருக்கிறார். ஆபிரிக்காவில் வெள்ளையர்கள் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும் என அவர் சொல்லாமல் சொல்லிக்காட்டியிருக்கிறார்.

அங்கோலாவில் என்ன நடக்கிறதென்பது சரியாக வெளி உலகுக்குத்தெரியாது. தெரிந்த கொஞ்சமும் பயங்கரத்தின் எல்லையையே தாண்டிவிட்டது. சமீபத்தில் அங்குள்ள நிலைபற்றி ஆராய ஐ. நா. உபகமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. கமிட்டியின் அறிக்கை மூர்ச்சிக்கச் செய்தாலும் ஆச்சரியமில்லை. ஆயினும் காலவெள்ளத்தில் வணங்காத ஸலஸாரும் வணங்கியே தீரவேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

## திருவிழா முடிவு

மாவிட்டபுரம், புதன்

கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவம் நேற்று நடைபெற்ற தீர்த்தோற்சவத்துடன் முடிவடைந்தது. திங்கட்கிழமை நடந்த தீர்த்தோற்சவத்தின் போது அருள்நெறி மன்றத்தினர் அடியார்களுக்கு அன்னதானமளித்தனர்.

மயிலிட்டிப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊஞ்சல் உற்சவத்துடன் பூர்த்தியடைந்தது.

உப்புமடத்தடி ஞானவைரவ கோவிலின் உற்சவமும் நேற்றுடன் முடிவுபெற்றது.

கும்பிழாவளைப் பிள்ளையார் கோயிலின் மகோற்சவம் நேற்று நடைபெற்ற தீர்த்தோற்சவத்துடன் நிறைவெய்தியது.

## கந்தபுராணப் படிப்பு

மாவிட்டபுரம், புதன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகியுள்ளது.

கீரிமலைச் சிறுப்பர் மடத்தில் நடந்து வந்த கந்தபுராணப் படிப்பு பூர்த்தியடைந்த விட்டது.

# அக்கரைப்பற்றுப் பகுதியில் மாதிரி விவசாயப் பண்ணை

அக்கரைப்பற்று, மே, 31

விவசாயத்தை நாட்டில் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரிவுக் காரியாதிகாரியின் அதிகார எல்லைக்குள் மூன்று மாதிரி விவசாயப் பண்ணைகள் இந்த வருடத்தில் உதயமாக இருக்கின்றன. ஒவ்வொரு பண்ணையும் பத்து ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்டதாக இருக்கும். பிரஸ்தாப பத்து ஏக்கரிலும் நவீன முறையில் நெற்சாகுபடி, காய்கறிச் செய்கை, கோழிவளர்ப்பு, மந்தைவளர்ப்பு ஆகியன இடம் பெறும்.

அக்கரைப்பற்று பிரிவுக்காரியாதிகாரியின் அதிகார எல்லையைச் சேர்ந்த ஒலுவில், அக்கரைப்பற்றுக் கிறவல் குழி, திருக்கோயில் குஞ்சுப் பணிக்கன் தலாவை ஆகிய இடங்களில்தான் பிரஸ்தாப மாதிரிப் பண்ணைகள் அமையவிருக்கின்றன. இந்தப் பண்ணைகளில் விவசாயப் பட்டதாரிகளுக்கும், ஏனைய விவசாயப்பயிற்சி பெற்றவர்களுக்கும் தொழில் வசதி அளிக்கப்படுமாம். இந்தத் திட்டத்தினால் அதிகரித்துவரும் வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒரு படி குறைப்பதோடு உணவு உற்பத்தியிலும் ஒரு படி முன்னேற்றம் ஏற்பட ஏதுவாக இருக்கிறதென்று சம்பந்தப்பட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கிரிக்கெட்: வீனஸ் வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

கடந்த சனிக்கிழமை வதிரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வீனஸ் கோஷ்டி, வதிரி பொம்பேஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது.

## ஜப்பானில் காட்டுத் தீ

### 1,500 வீடுகள் நாசம்

டோக்கியோ, மே 30

வட ஜப்பானில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் ஐந்து பேர் கொல்லப்பட்டனர், இரண்டு பேர் எங்கிருக்கின்றார்கள் என்று தெரியவில்லை. இதைவிட 100-க்கு அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்று செய்தி கூறுகின்றது.

இந்தக் காட்டுத் தீயினால் 1,500 வீடுகள் தீக்கிரையாயின. பலமான காற்று வீசியதினால், தீக்கொழுந்து பல இடங்களுக்கும் பரவி, ஆமோரி என்ற ஊரில் உள்ள ஒரு பாடசாலையின் கூரையையும் தூக்கியெறிந்தது. இதில் 84 பேர் காயமடைந்துள்ளனர் என்று மேலும் அச் செய்தி கூறுகின்றது.

## வரிவிலக்குச் சலுகை நீடிப்பு

கொழும்பு, புதன்

1955-ம் ஆண்டின் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவோருக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கும் கால எல்லையை மேலும் நீடிப்பதற்கு, வீடமைப்பு அமைச்சருக்கு நிதி அமைச்சர் சிபார்சுசெய்துள்ளார்.

தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ் வசிப்பதற்கான வீடுகள் கட்டுவோருக்கு 1955-ம் ஆண்டு ஏப்ரல்மாதத்திலிருந்து ஏழுவருட காலத்துக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.


பிரசித்திபெற்ற புதிய
டெலிபங்கன்
ரேடியோகிராம் D 789



TELE FUNKEN

வால்நட் அல்லது எல்ம கபினெட்டுகளில் உள்ளன.
தானே இயங்கும் ரிக்கார்ட் மாற்றும் கருவி.
இசைத்தட்டுகள், ஒலிப்பதிவுநாடாக்கள் வைப்பதற்குப்போதிய அளவு இட விசாலம்.
9 கிரியையுடைய 7 வால்வுகள்.
5 அலைக் குழுக்கள்.
அமுக்கு பொத்தான் கட்டுப்பாடு சுருதி நிலைத் தெரிவு.
6 ஒலிபெருக்கிகள்,
2 வூவர்ஸ்.
2 டுவிட்டர்ஸ்.
2 ஸ்டாட்டிக் டுவிட்டர்ஸ்.

உஷ்ணப் பிரதேசத்திற் கேற்ப தயாரிக்கப்பட்டது.

டெலிபங்கன்

இலக்கிக்காட்ட கீழ்க்கண்ட விலாசத்திற்கு விஜயஞ்செய்யுங்கள்.
GWE
85, மெயின் வீதி புறக்கோட்டை.
போன்: 2082
CA5/4 WE/TR/66

# பயிர் பூச்சிகளை ஒழித்துக்கட்ட மாபெரும் முயற்சி

ஹனேவர்

பயிர்களுக்கு வரும் புழு, பூச்சிகளைக் கொல்வதற்காக விமானங்களிலிருந்து மருந்துகளைத் தூவும் பணியை இதர நாடுகளுக்காகவும் மேற்கு ஜேர்மனி மேற்கொண்டு வருகிறது. உதவி கோரும் நாட்டிற்கு சமயத்தில் போய் உதவி செய்யத்தக்க ஏற்பாடுகளையும் மேற்கு ஜேர்மனி செய்துள்ளது.

இத்தகைய உதவி சென்ற 5 வருட காலமாக அளிக்கப்பட்டு வருகிறது. ஆஸ்திரேலியா, இந்தியா, பிரேஸில் லெபனன் ஆகிய தொலை தூர நாடுகளில் பயிர்களுக்கு வரும் பூச்சிகளை ஒழித்துக்கட்ட உதவிகள் கோரப்படுகின்றன.

பயிர்களுக்கு வரும் பூச்சிகளை ஒழித்துக் கட்டுவதில் கால தாமதம் கூடாது. சிறிது கால தாமதமானாலும் பொருட்சேதம் ஏராளமாகிவிடும். ஆகவே, காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டிய தவசியம். இந்தப் புழு, பூச்சிகள் ஒரு விநாடியில் பல்லாயிரக்கணக்கில் பெருகக் கூடியயது. சமீப காலத்தில் உணவுப் பயிர்களை அழிக்கும் இவைகளின் ரகங்களும் எண்ணிக்கையும் பன்மடங்கு பெருகியுள்ளன.

நவீன தோட்டப் பொருள்கள் பலரகப் பூச்சிகள் தோன்றிப் பரவுவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றன. அதுவுமின்றி மனிதர்கள் தாங்கள் அறியாமலேயே இப் புழு, பூச்சிகளைப் பல இடங்களில் பரப்பக் காரணமாக இருந்து வருகின்றனர். நீர்ப்பாசனங்கள், அணைகள் கட்டப்பட்டதன் காரணமாக நத்தை போன்ற சில ஜந்துக்கள் பல இடங்களில் பரவியுள்ளன.

ஜேர்மன் பயிர் பாதுகாப்பு ரசாயனத்துறை சமீப வருஷங்களில் ஆராய்ச்சிகள் நடத்தி இவைகளை ஒழித்துக் கட்டுவதற்கான மருந்துகளைக் கண்டு பிடித்துள்ளது. மேலும் மேலும் ஆராய்ச்சிகள் நடத்துவதின் காரணமாக புழு, பூச்சிகளிலுள்ள அநேக ரகங்களை ஒழித்துக்கட்ட பல தினுசான மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இத்துடன் தங்கள் வேலை தீர்ந்துவிட்டது என்று ஜேர்மன் ஆராய்ச்சியாளர்கள் சும்மாயிருந்துவிடுவதற்கில்லை. ஏனெனில் புழு, பூச்சிகள் இம்மருந்துகளுக்குப் பழக்கப்பட்டுப் போவதால் அவை இம்மருந்துகளால் அழிந்துவிடுவதில்லை. ஆகவே, அவ்வப்போது புதுப்புது மருந்துகளைக் கண்டு பிடித்துக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது.

ஒரு பிரபல ஜேர்மன் நிபுணர் இதுபற்றிக் கூறுகையில் "இப் போராட்டத்தில் முடிவான வெற்றி என்பது சாத்தியமில்லை. ஆனால் சில வருடங்களுக்கோ அலலது மாதங்களுக்கோ நீடிக்கும்படியான வெற்றி கிடைக்குமானால் அதைக் கொண்டேதிருப்திப்பட வேண்டும்" என்றார்.

## ரயில் வண்டிச் சக்கரங்கள்

### துர்க்காபூரில் உற்பத்தி

துர்க்காபூர், மே 31

ரயில் வண்டிச் சக்கரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று துர்க்காபூரில் நிறுவப்பட்டு வருகிறது.

ரயில் பெட்டிகள், ரயில் என்ஜின்கள் முதலியன பாரதத்திலேயே சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன வென்றும் ரயில் சேவையில் விரைவில் சுயதேவைப் பூர்த்தியடையுமென்று ஒரு அதிகாரி கூறினார்.

## சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயில் திருப்பணிச் சபை

கொடிகாமம், புதன்

சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயிற் திருப்பணி வேலைகளைப் புனருத்தாரணஞ் செய்வதற்கு ஒரு திருப்பணிச் சபை அமைப்பதற்காகக் கோயில் மண்டபத்தில்பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. திரு. கே. மயில்வாகனம் தலைமைவகித்தார். பெருந்தொகைப் பணஞ் செலவிட்டுத் திருவிழா நடத்தும் கோயில்களுள் இதுவும் ஒன்று. ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்டுவரும் அலங்காரத் திருவிழாக்காட்சிகள் இவ்வாண்டு அவசரகாலச் சட்டத்தை முன்னிட்டு, இரவு பத்திமணிக்கு முன்னதாக நடத்தி முடித்துவிடுவதெனமுடிவுசெய்யப்பெற்றது. பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப் பெற்றன: திருவிழாவுக்காகச் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியைக் கோயிற் திருப்பணி வேலைக்காக உதவுதல், திருப்பணி வேலைக்காக நிதிதிரட்டுதல், இந்நிதியில் ஒருபகுதியை கோயிலுக்கான புதிய தேர் அமைப்பதற்கு ஒதுக்குதல்.

திருப்பணிச்சபையின் தலைவராக திரு. கே. மயில்வாகனமும், காரியதரிசியாக திரு. கே.இராமலிங்கமும், தனாதிகாரியாக திரு. ஏ. வல்லிபுரமும் மற்றும் 8 பேர்கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### மன்னாரில் வள்ளுவர் விழா

மன்னார், புதன்

மன்னார் சோக்ரதீதஸ் மன்றத்தின் ஆதரவில் திருவள்ளுவர் விழா இங்கு கொண்டாடப்பெற்றது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

வியாழன் 1-6-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைஇசை, 8-00 வாத்தியஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்.

இரவு 7-00 வி. எஸ். எஸ். மணிபாகவதர் -கதாப்பிரசங்கம் 7-45 நேயர் விருப்பம், 8-15 'வாழ்க்கைத் திரை' - தொடர் நாடகம்.

இரவு 8-30 வாத்தியக் கோஷ்டி, 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 மீனாட்சி-லட்சுமி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளருக்கு 1-00 இசைக்கோவை, 2-10 மீனாட்சிலட்சுமி - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சி. எஸ். கமலபதி – பேச்சு, 7-45 சென்னை அஞ்சல், 8-30 டில்லி அஞ்சல் 8.40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகில பாரத இலக்கிய வரிசை.

## ரா. பி. மறைவுக்கு அனுதாபம்

கோப்பாய், வியாழன்

சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்று சென்ற சனிக்கிழமை நடைபெற்ற புத்தூர் கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலைய இணைப்புக் கூட்டத்தில் நிறைவேறப்பட்டது.

பின்னர் நடைபெற்ற கிராம முன்னேற்றச் சங்கப் புதுவருட உத்தியோகத் தெரிவின்போது தலைவராக திரு. கே. தங்கராசாவும் உபதலைவராக திரு. பி. மாணிக்கவாசகரும், காரியதரிசியாக திரு. எம். கணேசனும், தனாதிகாரியாக திரு. இ. நடராசாவும் மற்றும் 9 பேர் கொண்ட நிருவாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

புத்தூர் சனசமூகநிலைய புதுவருட உத்தியோகத்தர் தெரிவின்போது திரு. கே. சுப்பிரமணியம் தலைவராகவும், திரு. பி. சிவகுருநாதன் உபதலைவராகவும், திரு. கணேசன் காரியதரிசியாகவும், திரு. இ. நடராசா தனாதிகாரியாகவும் மற்றும் 7 பேர் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## வதிரி அர்ச். அந்தோனியார் பெருநாள்

உடுப்பிட்டி, புதன்

வதிரி அர்ச். அந்தோனியார் ஆலயப் பெருநாள் இவ்வாண்டும் வழக்கம்போல ஜூன் 1-ம் திகதி வியாழன் ஆரம்பித்து 12-ம் திகதி இரவு சுரூப எழுந்தேற்றத்துடனும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடனும், மறுநாள் கோவிற் கட்டளைக்குரு வண. ஜே. ஏ. கருணாகர அடிகளின் பாடற் பூசையுடனும் முடிவடையும்.

## பாம்பு கடித்து குழந்தைமரணம்

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த வி. தங்கமணி என்பவரின் நான்கு மாதக்குழந்தை செவ்வாய் அதிகாலை வற்றுப்பளை அம்மன் கோவிலடியில் பாம்பு கடித்து மரணமானது.

பிரேத அடக்கம் கரவெட்டியில் நடைபெற்றது.

## 'பாஸ்போர்ட்' காரியாலயம்

### யாழ்ப்பாணத்தில் மூடப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பாஸ்போர்ட் காரியாலயம் மிக விரைவில் மூடப்படலாமெனத் தெரிகிறது. கடந்த சில காலங்களாக இது தனது கருமங்களைச் சுருக்கிக்கொண்டு வந்து இப்பொழுது இது இயங்காதிருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்பு பாஸ்போர்ட் விநியோகம் முதலியவை சம்பந்தமான சகல விவகாரங்களையும் கவனித்துக்கொண்டு வந்த இக்காரியாலயம் சில காலங்களுக்குமுன் விண்ணப்பங்களை ஏற்று மேலிடத்துக்கு அனுப்பி பாஸ்போர்ட் விநியோகம் செய்தது. இருப்பிலிருக்கும் விண்ணப்பப்பத்திரங்களை மாத்திரம் விநியோகிப்பதே இக்காரியாலயத்தின் தற்போதைய வேலையாகும்.

## 'வான்'மீது பொலிசார் கண்ணோட்டம்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு வீதிகளில் பிரயாணிகளை ஏற்றும் தனிப்பட்ட வான்கள், கார்கள் மீது பொலிசாரின் கண்ணோட்டம் திரும்பியிருக்கிறது. இவர்கள் மீது விரைவில் வழக்குத் தொடரப்படுமெனத் தெரிகிறது.

## கதிரேசன் கோவிலில் களவு

புத்தளம், புதன்

புத்தளம் பகுதியில் சேனைக் குடியிருப்பு என்ற இடத்திலுள்ள கதிரேசன் கோயிலில் பித்தளை, செம்பு பாத்திரங்களும் பித்தளையால் செய்யப்பட்ட விக்கிரகங்களும் களவாடப்பட்டுள்ளன.

கோயில் மனேஜர் கதவைத் திறந்து பார்த்தபொழுது இப் பொருள்கள் களவாடப்பட்டிருப்பதைக் கண்டார்.

புத்தளம் பொலிசார் இது சம்பந்தமாகப் புலன்விசாரணை செய்து வருகின்றனர். இதுவரை களவு போன பொருள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## சலுகை நீடிப்பு

கொழும்பு, புதன்

முப்பது மைல் தூரத்துக்கு அப்பாலிருந்து வேலை செய்யும் இடங்களுக்குச் செல்லும் அரசாங்க ஊழியர்களின் புகையிரத சீஸன் டிக்கட் சலுகை ஜூன் மாதம் முதல் திகதியிலிருந்து மேலும் மூன்று மாத காலத்துக்கு நீடிப்பதென அரசாங்கம் முடிவுசெய்யதுள்ளது.

மே மாத இறுதியுடன் இச் சலுகையை நிறுத்துவதென்று திறைசேரி முன்பு விடுத்த ஒரு சுற்றறிக்கையை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் ஆட்சேபித்திருந்தது.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதீ அன் கோ.
குருநெனிய.

மொணரு அன் ரோஸ் பப்படங்கள்
நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது
MONARA PAPPADAM மொணரு பப்படம் TRADE MARK 1850
மொணரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு
ROSE FLOWER BRAND BEST PAPPADAM REGD. TRADE MARK No 18255 A. M. BUHARI, 255, 5th CROSS St. COLOMBO.
இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.
தயாரிப்பவர்கள்:
ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# 49கிராமங்களைக்கொண்ட கல்லோயா பிரதேசம்

## மத்திய அரசாங்கம் பொறுப்பேற்றது

கொழும்பு, புதன்

கல்லோயா பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட 200 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பு மத்திய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

இதுவரை கல்லேயோ அபிவிருத்திச் சபையின் நிர்வாகத்தின் கீழிருந்த இந் நிலப்பரப்பின் வேலைகள் இனி மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியான அரசாங்க அதிபர், பொதுமராமத்து இலாகா, நில அபிவிருத்திக் கமிஷனர் ஆகியோரின் நிர்வாகத்தின் கீழிருக்கும். இப்பகுதியில் அபிவிருத்திச் சபையின் கீழ் பணியாற்றிய உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அரசாங்க இலாகாக்களின் கீழ் இனிக் கடமையாற்றுவர்.

காடாகக் கிடந்த இப்பகுதி கல்லோயா அபிவிருத்திச் சபையால் சீர்திருத்தப்பட்டு இப்பொழுது 43 கிராமங்களைக் கொண்ட பிரதேசமாகக் காட்சியளிக்கிறது. மின்சாரம் உட்பட சகல வசதிகளும் இப்பகுதியில் உண்டு.

மத்திய அரசாங்கத்திடம் கல்லோயா அபிவிருத்திச் சபையால் கையளிக்கப்பட்ட இந் நிலப்பரப்பின் எல்லை விபரங்களை விளக்கி விசேஷ கஸெட் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## தாராசிங் உண்ணாவிரதம்

### ஜனசங்கத் தலைவர் கண்டனம்

புதுடில்லி, மே 31

பஞ்சாபிமொழி ராஜ்யக் கோரிக்கை நிறைவேறும்வரை ஆகஸ்ட்மாதம் 15-ந் திகதி தொடக்கம் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அகாலிடால் தலைவர் மாஸ்டர் தாராசிங் அறிவித்திருப்பதை ஜனசங் கட்சியின் உபதலைவர் திரு. கிருஷன்லால் கண்டித்துள்ளார்.

மாஸ்டர் தாராசிங்கின் இந்த உண்ணாவிரத நடவடிக்கை நாட்டுக்கோ, மக்களுக்கோ எந்த விதத்திலும் நன்மையளிக்காது என்று திரு. கிருஷன்லால் தெரிவித்துள்ளார்.

"பஞ்சாபிசுபா கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக அகாலிடால் இயக்கத்தினர் சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு பார்த்துவிட்டனர். இனி உள்ள ஒரேயொரு வழி தேர்தல்தான்" என்று கிருஷன்லால் கூறினர்.

## போபால் வேலை நிறுத்தம் முடிவு

போபால், மே 31

போபால் கனரக மின்சார சாதன தொழிற்சாலையில் சென்ற 16 தினங்களாக நடைபெற்று வந்த வேலை நிறுத்தம் தொழிற்சாலை நிர்வாகிகளுக்கும் பயிற்சியாளர்களுக்கும் ஏற்பட்ட ஒரு சமரச உடன்படிக்கையைத் தொடர்ந்து நேற்று கைவிடப்பட்டது.

பயிற்சியாளர் தங்கள் பயிற்சிக்காலம் முடிவடைந்ததும் மீண்டும் தங்களுக்குப் பரீட்சை நடத்தக்கூடாது என்று கோரி வேலை நிறுத்தம் செய்தனர்; வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த 16 பயிற்சியாளரையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள நிர்வாகிகள் ஒப்புக் கொண்டனர்.

## மைசூர் பருப்பு

### குறைந்த விலையில் கிடைக்கும்

கொழும்பு, புதன்

பங்கீட்டரிசிப் புத்தகமுள்ளவர்களுக்கும் தோட்ட சுப்ரின்டென்ட்மூலம் பங்கீட்டரிசி பெறுபவர்களுக்கும் குறைந்த விலையில் மைசூர்ப்பருப்பு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலாம்ரக மைசூர்ப்பருப்பு ருத்தல் 52 சதவீதமாகவும் இரண்டாம் ரக மைசூர்ப்பருப்பு ருத்தல் 48 சதவீதமாகவும் வழங்கப்படும். பங்கீட்டரிசிப் புத்தகமுள்ள ஒவ்வொருவருக்கும் இந்த விலையில் 8 அவுன்ஸ் பருப்பு ஒவ்வொரு மாதமும் கிடைக்கும்.

குறைக்கப்பட்ட இந்த விலையின்படி பருப்பு கொடுக்கப்படாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவுக்கமிஷனர் திரு. ஆர். எல். அர்னேல்டா உத்தரவுபெற்ற வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## என்ஜினியர்களின் திறமை!

கொழும்பு, புதன்

"தொழில் நுட்பத் துறைகளில் பயிற்சிபெற்ற பின்னர், பொதுமராமத்து இலாகாவில் கடமையாற்றும் அநேக என்ஜனியர்கள் தார்ப்பீப்பாக்களையும், உலோகப் பொருள் குவியல்களையும் கணக்கெடுப்பதில் மாத்திரமே தங்கள் நேரத்தை செலவழிக்கின்றனர். தமது சிந்தனையைக் கொண்டு சுயமான வேலைகள் செய்வதில், இலங்கைப் பொது மராமத்து இலாகாவிலுள்ள இளம் என்ஜினியர்களுக்கு ஆற்றலில்லை."

இவ்வாறு கிழக்கு நைஜீரியாவில் வீதிகள், பாலங்கள் அமைப்புப் பகுதியில் செயல்துறை என்ஜினியராகக் கடமையாற்றப்போகும் பொது மராமத்து இலாகாவின் ஓர் என்ஜினியரான திரு. எம். கணேஷன் தெரிவித்துள்ளார்.

## வகுப்பு சௌஜன்யம்

### இல்லையேல் முன்னேற்றம் இல்லை

அவிசாவளை, செவ்வாய்

"இந்தநாட்டில்உண்மையான வகுப்பு சௌஜன்யம் இல்லாதவரை உண்மையான கைத்தொழில் அபிவிருத்தியை நாம் எதிர் பார்க்கமுடியாது" என்று இலங்கை தோட்ட உத்தியோகத்தர்சங்கத் தலைவர் திரு ஜே. ஸி. வி. கொடித்துவாக்கு கூறினர்.

சங்கத்தின் 41-வது வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து திரு. கொடித்துவாக்கு பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

இந்த நாட்டின் சிங்களவர்களும் தமிழர்களும் உடனிருந்து வாழவேண்டியவர்கள். ஜனநாயக சட்டரீதியாக எடுக்கப்படும் முடிவுகளை நாட்டின் நலனுக்காக அவர்கள் மதித்து நடக்கவேண்டியது அவர்களின் கடமை.

அரசாங்கம் இந்த முடிவுகளை அமுல் நடத்தும் பொழுது பிரஜைகளுக்கு அவர்கள் தமிழர்களானாலும் பறங்கியரானாலும் சரி, முஸ்லிம்கள் சிங்களவரானாலும் சரி எவருக்கும் கஷ்டம் நேராதுவாறு கவனித்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

# பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம்

## புதிய டைரக்டாகள் நியமனம்; திரு. குமாரசாமி உபதலைவர்

கொழும்பு, புதன்

புதிதாக அமைக்கப்பட்ட இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபன சபையின் தலைவராக திரு. என். ஈ. வீரசூரியா கியூ. ஸி. நியமிக்கப்பட்டுள்ளார்.

இச்சபையின் உபதலைவராக திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமியும் திருவாளர்கள் எல். பி. ஜயசேன, டி. டபிள்யூ. விக்ரமசிங்கா, வி. எம். பீரிஸ் ஆகியோர் சபையின் இதர அங்கத்தவர்களாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம் ஜூன்மாதம் முதல்திகதி தொடக்கம் ரோஸ்மிட்பிளேஸிலுள்ள அதன் புதிய தலைமைக்காரியாலயத்தில் செயல்பட ஆரம்பிக்கும். திரு. சாம். சில்வா என்பவர் இந்த ஸ்தாபனத்தின் ஜெனரல் மானேஜர்.

நாளை வியாழக்கிழமை செயல்பட ஆரம்பிக்கும் இந்த கூட்டுஸ்தாபனத்தின் டைரக்டர்கள் சபையின் முதல்வேலை ஸ்தாபனத்தில் பல்வேறு பதவிகளுக்கும் உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதாகத் தானிருக்கும் என்று வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்வேறு முக்கிய பதவிகளுக்கும் வர்த்தக அமைச்சு ஏற்கனவே விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

டைரக்டர்கள் சபையின் உபதலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. ஈ. எஸ். ஆர். எஸ். குமாரசாமி ஒரு பிரபல வழக்கறிஞர். இலங்கை சட்டக்கல்லூரியில் அவர் ஒரு விரிவுரையாளராகவும் பரீட்சாதிகாரியாகவும் பணிபுரிபவர். 1960ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருக்கோணமலைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகராக போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்.

## வற்றுப்பழைக் கண்ணகை அம்மன் பொங்கல்

முள்ளியவளை, புதன்

ஆண்டுதோறும் வைகாசி விசாகம் பௌர்ணமியில் நடைபெறும். வற்றுப்பழைக் கண்ணகி அம்மன் பொங்கல்விழா இம்முறையும் வழமைபோல் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையார் வெளிச்சம் நீர் முதலிய வசதிகளையும் தொண்டர்கள் உதவியுடன் பிற உதவிகளையும் செய்திருந்தனர். பிரயாணிகளின் போக்குவரவு வசதிகளை இ. போ. ச. வினர் செய்தனர்.

இரவு முழுவதும், கண்ணகி கதை பாடப்பெற்றது.

# தேசியக் கல்வித் திட்டம்

மாத்தளை, புதன்

அரசாங்கத்தினுல் அறிமுகம் செய்யப்பட்ட தேசிய கல்வித் திட்டம், மற்றுமொரு இலங்கைப் போக்குவரத்து சபையாக மாறுமா என்றசந்தேகம் இந்நாட்டிலுள்ள மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு, மாத்தளை திருச்சபைப் பாடசாலையில் நடைபெற்ற மாத்தளை ஆசிரிய சங்கக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் லங்கா ஜாதிக குரு சங்கத்தின் கண்டிக்கிளைப் பிரிவுக் காரியதரிசி திரு. கே. ஜே. பெர்ணுந்து குறிப்பிட்டார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
பிளாஸா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) நவா (கும்பனித்தெரு)
விஜிதா (மஸ்கேலியா)
உதயகுமார், எஸ். வரலக்ஷ்மி, கண்ணும்பா, சூரியகலா நடித்த
ஜெய பவானி
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

7-வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு)

எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
மணப்பந்தல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி, மாலை 1-30 மாலை 5-30 மணிக்கும்
சிவாஜி கணேசன், சாவித்திரி, தங்கவேல் நடித்த
வணங்காமுடி

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரிமாலை5-30மணிக்கு
வியாழன், வெள்ளி காலை 10மணிக்கு
சனி, ஞாயிறு மாலை 2 மணிக்கு மட்டும்
சிவாஜி கணேசன், பத்மினி நடித்த
எதிர்பாராதது

வியாழன், வெள்ளி மாலை 2 மணி, 3-45 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30க்கு மட்டும்
மான் இன் த நெட்
(திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஆங்கிலப்படம்)
MAN IN THE NET
(ENGLISH)

[illegible] லிமிட்டெட். தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது